Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 302

ஞாயிற்றுக்கிழமை 24 செப்ரெம்பர் 2023

புரட்டாதி 07 ஆம் நாள் – வள்[illegible]ண்டு 2054



## ஜனவரியில் மீண்டும் சீனக்கப்பல் வரும்

### பிராந்தியத்தில் தொடர் பதற்றம்

**கொழும்பு, செப்ரெம்பர் 24**

**இலங்கைக்கு 'ஷின் யான் - 6' என்ற கப்பல் வருகை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் மற்றொரு சீனக் கப்பல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் இலங்கையைச் சுற்றி பூகோளப் பதற்றம் அதிகரித்துள்ளது.** »04

## ஜெய்சங்கர் இலங்கைக்கு வருவாரா?

கொழும்பு, செப். 24
இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ள 23 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொள்ளும் மாநாடு அடுத்த மாதம் நடைபெறும் இலங்கையில் நடைபெற »04

கொடிகாமத்திலிருந்து -

## திலீபனின் ஊர்தி இன்று புறப்படும்

யாழ்ப்பாணம், செப். 24
தியாகதீபம் திலீபன் நினைவு ஊர்தி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கொடிகாமத்திலிருந்து புறப்படவுள்ளது. »04

கட்சி அரசியலுக்காக

## தியாகதீபம் திலீபனை குத்தகைக்கு எடுத்துள்ளனர்

### சி.வீ.கே.சிவஞானம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 24
திலீபனை சிலர் தமது கட்சி அரசியலுக்காக குத்தகைக்கு எடுத்து திருகோணமலையில் அடி வாங்க வைத்துள்ளமை மனவேதனை அளிப்பதாக வட மாகாணசபை அவைத் தலைவர் »04

## நிகழ்நிலைக்காப்புச் சட்டம் பயங்கரவாதத்துக்கு ஒப்பானது

### எதிர்க்கட்சித் தலைவர் காட்டம்

கொழும்பு, செப். 24
தற்போதைய அரசாங்கம் மக்களின் சுதந்திரத்தை இல்லாதொழிக்க முயற்சிக்கின்றது. அதன் புதிய போக்கே சமூக ஊடகங்கள் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகளைக் கட்டுப்படுத்தல், சீர்குலைத்தல், »04



## காஷ்மீர் விவகாரத்தை கையிலெடுத்த பாக்.

### கடுப்பாகியது இந்தியா

நியூயோர்க், செப். 24
ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது அமர்வில் பேசிய பாகிஸ்தான் இடைக்கால பிரதமர் அன்வருல் ஹக்கக்கர், காஷ்மீர் விவகாரம் குறித்து பிரச்சினை எழுப்பினார். இதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. »04

## சாதாரணதரப் பரீட்சையும் 6 வாரங்கள் தாமதமாகும்!

கொழும்பு, செப். 24
2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையும் ஒன்றரை மாதமளவில் தாமதம் அடையக்கூடும் என்று கல்வி அமைச்சர் »04

மன்னாரில்

## ரூ. 3 கோடி பெறுமதியான போதைமாத்திரைகள் மீட்பு!


மன்னார், செப். 24
தாழ்வுப்பாட்டில் பொலிஸ் மற்றும் இராணுவம் இணைந்து நேற்று மாலை முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையில் 3 கோடி ரூபா பெறுமதியான போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.
தள்ளாடி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களை அடுத்து இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. தாழ்வுப்பாட்டு காட்டுப் பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த »04

## வடக்கு - கிழக்கில் வேறு அரசாங்கமா?

### கேள்வி எழுப்புகிறார் தம்மரதன நாயக்க தேரர்

கொழும்பு, செப். 24
புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். அந்த அமைப்பைச் சேர்ந்த திலீபனுக்கு நினைவேந்தல் நடத்துவது அரசமைப்பைமீறும் »04

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
அதிகபட்ச இரகசியத்தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி



அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்
யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.
பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT
ashok STEEL
நீடித்த வலிமை
மத்திய மாகாணம் - 0779825832
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
கிழக்கு மாகாணம் - 0743712824
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3
ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ. 275,000 + VAT
375



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 கிராம் கஞ்சாவுடன் இருவர் கைதாகினர்

யாழ்., செப். 24

சுழிபுரம், நெல்லியான் பகுதியில் 6 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 20 மற்றும் 22 வயதுடையவர்கள். அவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (ம-125)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில்

# பிளாஸ்ரிக் பொருள்கள் ஒக்ரோபர் முதல் தடை!

யாழ்ப்பாணம், செப். 24

**தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பொருள்களுக்கு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

சூழலுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் இத்தகைய பொருள்களை விற்பனை செய்தல் அல்லது பயன்படுத்தல் அரச சட்ட விதிகளுக்கு எதிரானது என்பதால் தெல்லிப்பழைப் பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ள சகல வியாபார நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், திருமண மண்டபங்கள் உட்பட சகல தரப்பினரும் இந்த அறிவித்தலை உரிய முறையில் கடைப்பிடிக்குமாறு தெல்லிப்பழைச் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார் அறிவுறுத்தியுள்ளார்.

பிளாஸ்ரிக் ஸ்ரோ, கோப்பைகள், தட்டுகள், கத்திகள், முள்ளுக் கரண்டிகள், கரண்டிகள், இடியப்பத் தட்டு, மாலைகள் போன்ற ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராகத் தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் விதிகளின்படி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-66)

# கசிப்புடன் இருவர் கைது

யாழ்., செப். 24

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் 50 மற்றும் 55 வயதுடைய இருவர் கசிப்புடன் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து தலா 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-125)



கிளி. விவசாய பீடத்தில்

# பேராசிரியர் சோ.கந்தையா நினைவுப் பேருரை நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். பல்கலைக்கழகத்தில் முதலாவது விவசாய பீடத்தின் பீடாதிபதியாகக் கடமையாற்றிய பேராசிரியர் சோமசுந்தரம் கந்தையாவின் நினைவுப்பேருரை நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாயபீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விவசாயபீட பீடாதிபதி எஸ்.வசந்தரூபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.கண்ணதாசன் பங்கேற்றார்.


நிகழ்வில் பேச்சாளராக ஜப்பான் டோக்கியோ பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தொழில்நுட்ப பேராசிரியர் 'வளர்ந்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப மண்பயன்பாடு' என்ற தொனிப்பொருளில் கருத்துரையாற்றினார். தொழில்நுட்பப் பீட பீடாதிபதி சிவமதி சிவச்சந்திரன், விவசாய பீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் பங்கேற்றனர். (ச-113)

# 'பட்ஜெட்டின்' பின்னர் அரசியலில் மாற்றம்

கொழும்பு, செப். 24

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் முன்வைக்கப்படவுள்ளநிலையில் 'பட்ஜெட்' கூட்டத் தொடர் முடிவடைந்த பின்னர் தெற்கு அரசியலில் அதிரடி மாற்றங்கள் இடம்பெறவுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

2024ஆம் ஆண்டு தேர்தல் வருடம் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வேட்பாளர் தேர்வு, அரசியல் கூட்டணி, தொகுதிகளை பலப்படுத்தல் என தேர்தல் காலத்துக்கே உரித்தான சம்பவங்கள் தற்போதிலிருந்தே அரங்கேறிவருகின்றன. (எ-44)



# யாழ். இந்து முன்றிலில் இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று இரத்ததான நிகழ்வு கல்லூரி முன்றிலில் நடைபெற்றது. கல்லூரியின் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் பலர் பங்கேற்று இரத்ததானம் வழங்கினர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் செப்ரெம்பர் மாதத்தின் இறுதி வாரத்தில் இரத்ததான நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது.

இரத்ததான நிகழ்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் கல்வி அமைச்சால் கல்லூரி வளாகத்துக்குள் இரத்ததான நிகழ்வு உள்ளிட்ட நிகழ்வுகள் நடத்துவதற்கு திடீர்த் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து கல்லூரி முன்றலில் அமைக்கப்பட்ட விசேடபந்தலில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது. (எ-27-20)

# நாய் கடித்து 12 பேர் சாவு!

இலங்கையில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாய்க்கடிக்கு இலக்காகி 12 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் எட்டுப் பேர் வீடுகளில் வளர்க்கப்பட்ட நாய்களால் கடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் வருடாந்தம் 2 இலட்சத்து 50 ஆயிரம் தொடக்கம் 3 இலட்சம் பேர் வரை விலங்குக்கடிக்கு ஆளாகின்றனர். அவர்களில் ஒரு இலட்சம் பேரே சிகிச்சை பெறுகின்றனர் என்றும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. (எ-இ)

# பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி மக்கள் கருத்தறியும் கூட்டம்

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையால் இந்த ஆண்டுகளில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்கள் கருத்தறியும் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை தலைமை அலுவலக மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரிவிலுள்ள மக்கள், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்று அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று சபையின் செயலாளர் திருமதி தர்சினி தயானந்தன் அறிவித்துள்ளார். (ச-9)

# தும்புத் தொழிற்சாலை பெயரில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு

## சந்தேகநபர்கள் நால்வர் கைது

தும்புத் தொழிற்சாலை எனும் பெயரில் இயங்கிவந்த சட்டவிரோத மணல் விற்பனை, கல் உற்பத்தி விற்பனை நிலையம் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் முற்றுகையிடப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள்நால்வர் கைது செய்யப்பட்டதுடன், மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தென்னந் தும்பு உற்பத்தி தொழிற்சாலை என்ற பெயரில் அனுமதி பெறப்பட்டு, பெரும் எடுப்பில் மணல் அகழப்பட்டு அவை விற்பனை செய்யப்பட்டு வந்தமையும், மணல் அரிவு செய்யப்பட்டு விற்கப்பட்டமையும் பொலிஸாரால் கண்டறியப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையிலான பொலிஸ் குழு இந்தச் சுற்றிவளைப்பை முன்னெடுத்தது. அங்கு மணல் அகழ்வால் இருநூறு மீற்றருக்கு அதிக நீளமும், சுமார் 15 அடி ஆழமும் 20 அடிக்கு மேல் அகலமும் கொண்ட பெரும் குழி தோன்றியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-27)


**வேலையாட்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கும் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.

1. கணக்காளர்
2. காசாளர்
3. உதவியாளர்
4. விற்பனை உதவியாளர்

077 711 1025


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# 'சனல் -4' கயிற்றில் தொங்கி மரணக்கயிறாக மாற்றாதீர்!

## கூறுகிறார் கம்மன்பில

கொழும்பு, செப். 24
ஈஸ்டர் தாக்குதலில் சர்வதேச விசாரணை கோருவோர், இந்தத் தாக்குதல் தொடர்பில் அமெரிக்காவின் எப்.பி.ஐ. அமைப்பு, அவுஸ்திரேலியா பெடரல் உள்ளிட்டவை இங்கே வந்து விசாரணை நடத்தி முன்வைத்த அறிக்கையை ஏன் ஏற்றுக் கொள்ளமுடியாது? 'சனல்- 4' கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தால் அது மரணக் கயிறாக மாறலாம் -இவ்வாறு ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு விவாதத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:
மேற்குலக நாடுகளில் இருந்து கொண்டு இங்கே பிரிவினை வாதத்துக்கு முயல்பவர்களுக்கு நாம் இடமளித்து விடக்கூடாது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் இரத்தம் மற்றும் கண்ணீரை அரசியல் இலாபத்துக்காக மாற்றுவதற்கு கீழ்த்தரமான முயற்சிகள் முன்னெடுக்கப் படுகின்றன. 2001- 2004 மற்றும் 2015 காலத்தை போன்றும் புலனாய்வுத் துறையை வீழ்ச்சியடையச் செய்து, இராணுவத்தினரைப் பலவீனமானவர்களாக்கி மீண்டும் நாட்டை இரத்த வெள்ளத்துக்குள் தள்ளும் முயற்சிகளுக்கு இடமளிக்க முடியாது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அமெரிக்காவின் எப்.பி.ஐ அமைப்பு, அவுஸ்திரேலியா பெடரல் என்பவை இங்கே வந்து விசாரணை நடத்தி அறிக்கையை முன்வைத்துள்ளனர். சர்வதேச விசாரணையை கோருபவர்கள் ஏன் அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது? - என்றார். (ச-இ)

# பணிப்புறக்கணிப்புகளை தவிர்க்க சட்டம் இயற்றுக

## பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு, செப். 24
மக்களின் அன்றாட வாழ்வியல் பாதிக்கப்படும் வகையில் மேற்கொள்ளப்படும் வேலைநிறுத்தப் போராட்டங்களை தவிர்க்க சட்டமொன்று கொண்டுவரப்பட வேண்டும் என்று பிரேரணையொன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளார். இதன்போது மதுர விதானகே குறிப்பிடுகையில்,

அத்தியாவசிய சேவைகளை வழங்கும் துறைகளில் தொடர் வேலைநிறுத்தம் காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. அதனால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. அலுவலர்களின் தொழில் சார் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட வழிமுறைகளை இந்தச் சட்டத்தில் உள்ளடக்க வேண்டும் - என்றார். (ச-இ)

# ஐ.எஸ். அமைப்பினர் நாட்டினுள் இருந்தனரெனக் கூறவில்லை

## எதிர்க்கட்சியினர் பொய்யுரைப்பு கூறுகிறார் வஜிர



கொழும்பு, செப். 24
ஈஸ்டர் குண்டுவெடிப்புச் சம்பவ காலப்பகுதியில், ஐ.எஸ். அமைப்பில் பயிற்சிபெற்றவர்கள் நாட்டுக்குள் இருந்தனர் என்று நான் ஒருபோதும் அப்போது பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவிக்கவில்லை. எதிர்க்கட்சியினர் கூறுவதை நான் உறுதியாக மறுக்கிறேன்.

- இவ்வாறு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:
ஐ.எஸ். அமைப்பில் பயிற்சி பெற்றவர்கள் நாட்டுக்குள் இருப்பதாக நான் தெரிவித்ததாக இந்தச் சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் தெரிவித்திருந்தனர்.

ஈஸ்டர் குண்டுவெடிப்பு இடம்பெற்ற பின்னர் பாதுகாப்புச் சபையில் கலந்துகொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தார். நானும் அவருடன் சென்றிருந்தேன்.

ஆயினும் சுமார் 20 நிமிடங்கள்வரை எம்மை வெளியில் அவர்கள் காத்திருக்க வைத்தனர். பிரதமர் அங்கு வந்திருப்பதை அறிந்த பாதுகாப்புத் தரப்பின் சிலர் அங்கு வந்து, சிறிது நேரம் இருக்குமாறே தெரிவித்திருந்தனர். பின்னர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் காரியாலயத்துக்கு அனைத்து அதிகாரிகளையும் அழைத்துக் கலந்துரையாடி எஞ்சிய குண்டுதாரிகளைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்தார். ஆயினும் குண்டுதாரிகள் அனைவரும் குண்டை வெடிக்க வைத்துவிட்டனர். - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஜனவரியில்...

சீனாவின் 'ஷின் யான் - 6' என்ற கப்பல் இலங்கைக்கு நேற்று வரவிருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீனப்பயணம் வரை கப்பலின் வருகையை ஒத்திவைக்க சீனா தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கிடையில் சீனாவின் மற்றுமொரு ஆய்வு கப்பலான 'சியாங் ஹொங் - 6' என்ற கப்பல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை வரவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே 'ஷின் யான்- 6' கப்பலின் இலங்கை வருகையை அயல் நாடான இந்தியா விரும்பவில்லை. அதை உளவுக்கப்பல் என்று இந்தியா சித்திரித்திருந்த நிலையில் நியூயோர்க்கில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை மறுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## ஜெய்சங்கர்...

வுள்ள நிலையில் அதில் பங்கேற்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்து சமுத்திர ரிம் அமைப்பின் தலைமைப் பதவியை இலங்கை வகிப்பதால் இந்த மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வரும் பின்புலத்தில் இந்த மாநாடு இலங்கையில் நடைபெற உள்ளது. அவர் மாநாட்டில் பங்கேற்பதை அவரது அலுவலகம் உறுதி செய்திருந்தாலும், உருவாகி வரும் நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு அவரது இலங்கைப் பயணம் ஒத்திவைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கத்தின் சீனச்சார்புக் கொள்கை காரணமாக இந்தியா சில அரசியல் நெருக்கடிகளை இலங்கைக்குக் கொடுத்து வருகிறது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த 2ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவிருந்த நிலையில், இறுதி நிமிடத்தில் அது ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## தியாகதீபம்...

சி.வீ.கே. சிவஞானம் கவலை தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1988 ஆம் ஆண்டு நல்லூரில் திலீபன் நினைவிடத்தை என்னுடைய பணத்தின் மூலம் நிர்மாணிக்க ஆரம்பித்து 1989ஆம் ஆண்டு திறந்து வைத்தேன். அப்போது இருந்த மாநகரசபைப் பணியாளர்கள் சரீர உதவிகளையும், இரண்டாவது அபிவிருத்திப் பணிக்காகக் கூட்டுறவுச் சங்கத்தினர் பண உதவிகளையும் வழங்கிய நிலையில் அதில் என்னுடைய பணத்தையும் செலவழித்தேன்.

தற்போது சிலர் கட்சி அரசியலுக்காக திலீபனை குத்தகைக்கு எடுத்துள்ளனர். இருவருடன் திருகோணமலைப் பகுதியில் திலீபனை அடி வாங்க வைத்தமையை ஊடகங்கள் ஊடாகப் பார்த்தேன். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை இடம்பெற்ற போராட்டம் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி அதிக எண்ணிக்கையானவர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது. இதன் காரணமாக குழப்ப வந்தவர்களும் குழம்பாமல் சென்றார்கள். ஆனால், திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவம் திலீபன் திட்டமிட்டு அடி வாங்கப்பட்ட சம்பவமாக நான் சந்தேகிக்கவில்லை. ஆனால், இது கட்சி அரசியலுக்காகவே தனித்துச் செய்யப்பட்டது - என்றார். (அ-ஒ-20)

## காஷ்மீர்...

'இந்தியாவுக்கு எதிராக முற்றிலும் பொய்ப் பரப்புரையை பாகிஸ்தான் செய்கிறது. ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசங்கள் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்' என இந்தியப் பிரதிநிதி பெடல் கெஹ்லோட் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

## ரூ.3 கோடி...

போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் தாராபுரத்தைச் சேர்ந்த 22 வயதான ஒருவர் கைதாகியுள்ளார். மன்னார் பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-ஒ-56-213)

## வடக்கு...

செயலாகும் என்று மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனவெவே தம்மரதன நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசமைப்பைமீறும் வகையில் செயற்படமாட்டேன் என உறுதிவழங்கியே நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்கின்றனர். நிலைமை இவ்வாறு இருக்கையில் அரசமைப்பைபுறந்தள்ளிவிட்டு, நினைவேந்தல் (திலீபன்) நடத்துகின்றனர்.

வடக்கில் ஐந்து மாவட்டங்களும், கிழக்கில் மூன்று மாவட்டங்களும் உள்ளன. இந்த 8 மாவட்டங்களிலும் நினைவேந்தல் நடத்தப்பட்டுள்ளது. பேரணி செல்வதற்கு பொலிஸாரால் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. இந்த 8 மாவட்டங்களும் தனியான பொலிஸ்மா அதிபருக்கு உரியதா? அங்கு வேறு ஜனாதிபதி ஒருவர் இருக்கின்றார் என்றே எண்ணத் தோன்றுகின்றது - என்றார். (அ-ஒ-44)

## சாதாரணதரப்...

சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அடுத்த வருடத்துக்காக அச்சிடப்பட்டுள்ள பாடப்புத்தகங்களைப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் ஆரம்பகட்ட நிகழ்வில் பங்கேற்றிருந்த அமைச்சரிடம், எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். (அ-ஒ-44)






## நிகழ்நிலைக்காப்புச்...

தடுத்தல் என்பனவாகும். அந்த நோக்கத்துக்காக 'நிகழ்நிலைக்காப்பு' என்ற வார்த்தை முன்வைக்கப்பட்டு, சமூக ஊடகங்களின் உரிமை அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டு அவற்றை ஒடுக்கும் செயற்பாட்டுக்கான முனைப்பு நடைபெறுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'அரசாங்கத்தின் இந்த ஊடக அடக்குமுறையானது பயங்கரவாதம் என்பதால் இதற்கு இடம்கொடுக்கப் போவதில்லை. இந்த ஊடக ஒடுக்குமுறைக்கும் சமூக ஊடகங்களின் கட்டுப்பாட்டுக்கும் எதிராக மக்களுடன் வீதியில் இறங்கிப் போராடுவோம்' என்று சஜித் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

## திலீபனின்...

தாயக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள ஊர்திப் பேரணியானது கொடிகாமம் சந்தியிலிருந்து காலை 8 மணிக்கு ஆரம்பிக்க உள்ளது.

கொடிகாமத்திலிருந்து ஆரம்பமாகும் ஊர்திப் பேரணியானது சாவகச்சேரி ஊடாக மன்னாரைச் சென்றடைந்து அங்கிருந்து வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களினூடாக பயணித்து நாளை மறுதினம் நல்லூரில் உள்ள தியாகதீபம் திலீபன் நினைவிடத்தை வந்தடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வீடற்றோருக்கு 25,000 நிரந்தர வீடுகள்!

## விசேட வேலைத்திட்டம் ஆரம்பம்

## ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 24**

**வடக்கு மாகாணத்தில் நிரந்தர வீடுகள் அற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதியின் செயற்றிட்டத்தின் கீழ் 25 ஆயிரம் நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வீட்டுத்திட்டம் தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

கலந்துரையாடலில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் குறைந்த வருமானம் கொண்ட நிரந்தர வீடற்ற குடும்பங்களை இனங்கண்டு வீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு துறைசார் அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

நிரந்தர வீடமைப்புத் திட்டத்தில் உட்கட்டமைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடங்களை உடனடியாகக் கண்டறிந்து அதற்கான திட்டங்களைத் தயாரித்து அறிக்கை ஒப்படைக்குமாறும் அறிவுறுத்தினார். நிரந்தர வீடொன்றை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் 5 மில்லியன் ரூபா செலவிடவுள்ளதுடன் வீடொன்றுக்குத் தேவையான வசதிகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது. இந்த வீடுகளின் கூரைகளைப் பயன்படுத்தி சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தைப் பெறுவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன்போது, கடந்த காலங்களில் பகுதியளவில் கட்டப்பட்டு கைவிடப்பட்ட வீட்டுத்திட்டங்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்கள் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். அதனைக் கேட்டறிந்த ஆளுநர் இடைநிறுத்தப்பட்ட அந்தப் பணிகளை இந்தத் திட்டத்தின் கீழ் முடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து உடனடியாக ஆய்வு செய்யுமாறு கூறினார். (ச-26,27.20)

## பணமோசடியில் சிறை சென்றவர் தமிழகத்தில் கைதாகி மறியலில்

சென்னை, செப். 24

தமிழ்நாடு - தனுஷ்கோடி கடற்கரையில் சட்டவிரோதமான முறையில் கரையிறங்கி அகதி போல் தஞ்சமடைந்த மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சிறையிலடைக்கப்பட்டுள்ளார். கிஷோகரன் (வயது- 31) என்ற இளைஞரே நேற்றுமுன்தினம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் இலங்கையில் பணமோசடி வழக்கில் சம்பந்தப்பட்டு சிறை சென்றவர் என்றும் வழக்கு விசாரணையில் இருந்து தப்பிப்பதற்காக தமிழகம் வந்துள்ளாரென வும் அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ-ஒ-100)


### காணி விற்பனைக்கு

கோப்பாய் தேசியக் கல்வியியல் கல்லூரிக்கு பின்புறமாக கண்ணகை அம்மன் கோவிலுக்கு தெற்கு புறமாகவும் வெள்ளெருக்கு பிள்ளையார் கோவிலிற்கு செல்லும் வீதியில் நல்ல அயல் சூழலில் 6 பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு: 076 654 5987

### வீட்டு வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் உள்ள சிறிய குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை

சம்பளம் - ரூபா 30000

தங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு

076 306 3306

(CS 26358) M-1

### மணமகள் தேவை

யாழ். இந்து (V) ஜேர்மனி வசிப்பிடம்

30 வயது - ஆண் திருவாதிரை

பெற்றோர் வரன் தேடுகின்றனர்.

பெற்றோர் தற்போது இலங்கை வந்துள்ளனர்.

தொடர்பு இல:

076 432 4666

(CS 26355) A-1

### மரண அறிவித்தல்



தோற்றம் 24.07.1938 — மறைவு 21.09.2023

**சுப்பிரமணியம் சண்முகலிங்கம்**

நுவரெலியா ஹற்றனைப் பிறப்பிடமாகவும், யாழ். ஆனைக்கோட்டை கூளாவடியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகலிங்கம் அவர்கள் 21-09-2023 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகரத்தினம் தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் பொன்மலர் தம்பதிகளின் அன்பு மருமகனும், உமாதேவி (ராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும், தர்சினி (கனடா), ஸ்ரீகோபிநாத் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுயதீபன் (கனடா), அனிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பார்கவி, சாருகன் ஆகியோரின் ஆசைப் பாட்டனாரும், காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி (சொக்காமி), விமலாதேவி (பேபி), சுந்தரலிங்கம் (sam), சுமித்திராதேவி (குஞ்சு), இந்திராதேவி (ஆச்சி) மற்றும் வசந்திராதேவி(தங்கராணி- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம், இரட்ணசபாபதி, மகேந்திரன், வேதராசா, இராஜேந்திரன் மற்றும் கேஸ்வரி (வத்தளை), கமலாதேவி (பேபி), சத்தியபாமா (பபா), மகேஷ்வரி (ராணி, அவுஸ்திரேலியா), வதனா (இலண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (25.09.2023) திங்கட்கிழமை மு.ப 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26359) A-1


## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்து விடுவீர்கள். மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்கவும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குழப்பங்கள் ஏற்பட்டாலும், பாதிப்பு இல்லை.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மனதில் துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறனும் அதிகரிக்கும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். பெரியவர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உற்சாகமாக செயற்படுவீர். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்பு கரையும். உறவினர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் கடன்கள் விஷயத்திலும் சற்று கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற பிரச்னைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீள நிகழாமையின் தேவைப்பாடு!

முல்லைத்தீவில் சிறுமியொருவர் வன்புணர்வுக்கு உட்பட்டிருக்கின்றார். சிறியதந்தையால் வன்புணரப்பட்ட அவர் கர்ப்பமாக உள்ளார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. வன்புணர்வுகள் இல்லாத நாள் இல்லை எனும் அளவுக்கு இந்த இழிசெயல்கள் இலங்கையில் அண்மைக்காலமாக நாளுக்குநாள் தீவிரமாகி வருகின்றன. போதையின் இலவச இணைப்பான இதன் கோர முகம் சமீப காலமாக வெகுவாகவே உணரப்படினும், முல்லைத்தீவுச் சிறுமி வன்புணரப்பட்ட விடயத்தில் இலங்கையில், குறிப்பாக வடமாகாணத்தின் சிறுவர் நலன்பேண் கட்டமைப்பு எவ்வளவுதூரம் வினைத்திறன் அற்றதாகவும் படுதோல்விப் பயணப்பாட்டைக் கொண்டதாகவும் இருக்கின்றது என்பதே பட்டவர்த்தனமாகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுமி ஆறு வருடங்களின் முன்னர், அதாவது தன் 9ஆவது வயதில் பிறிதொரு நபரால் வன்புணரப்பட்டிருக்கின்றார். நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் அவர் சிறுவர் மறுவாழ்வகத்துக்கு (பாதுகாப்பு இல்லத்துக்கு) அனுப்பப்பட்டு ஆறு வருடங்களின் பின்னர் இந்த வருடம்தான் குடும்பத்துடன் இணைக்கப்பட்டார். இவ்வாறு மீள இணைக்கப்பட்ட ஒருசில மாதங்களில் இவ்வாறான துர்ச்சம்பவத்தை – காலக்கொடுமையை அந்தச் சிறுமி மீண்டும் எதிர்கொண்டிருக்கின்றார்.

ஆறு வருடங்கள் சிறுவர் வாழ்வகத்தில் தங்கியிருந்தபின்னர், குடும்பத்துடன் இணைக்கப்பட்ட ஒரு சிறுமி – சமூகமயப்படுத்தப்பட்ட சில மாதங்களில் மீண்டும் அதே ஈனச் செயலை எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது என்றால், இலங்கையில் சிறுவர் நலன்பேண் கட்டமைப்பு எவ்வளவு பயனற்றதாகவும் கடைநிலையிலும் இருக்கின்றது என்பது மறுகருத்தின்றி மெய்ப்பிதமாகின்றது. பாலியல் வதையை – துர்நடத்தையை – வன்புணர்வை எதிர்கொண்ட சிறுமியோ அல்லது சிறுவனோ உரிய மறுவாழ்வின் பின்னர் கல்வித் திட்டங்களின் பின்னர் மீண்டும் சமூகமயப்படுத்தப்படும்போது அது தொடர்பான தெளிவும் – புரிதலும் உச்சபட்ச அளவில் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கவேண்டும். எனவே சிறுவர் காப்பகங்களில் வழங்கப்படும் கல்வி, அறிவுரை என்பனவும் இங்கு சவாலுக்குட்படுகின்றன.

எல்லாவற்றையும்விட அந்தச் சிறார்கள் மீண்டும் அவ்வாறான துர்க்கனவுகளை அணுகாதிருக்கக்கூடியதான குடும்பச்சூழலில்தான் இருக்கின்றார்களா? அவர்களின் குடும்பம் போதிய பாதுகாப்பிடமாக அவர்களுக்கு இருக்குமா? என்ற உறுதிப்படுத்தல்களை மேற்கொண்ட பின்னர்தான் அவர்கள் சமூகமயப்படுத்தப்படவேண்டும். சமூகமயப்படுத்தப்படுவதுடன் கடமை முடிந்தது என்றில்லாமல், அதன் பின்னர் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீது இறுக்கமான கண்காணிப்பையும் மேற்கொள்ளவேண்டும். இந்த நகர்வுகள் எதுவும் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பதையே முல்லைத்தீவுச் சிறுமிக்கு நேர்ந்த நிலை கற்பிக்கின்றது. ஒரு பானைச்சோற்றுக்குப் பதமான ஒரு சோறாகவே முல்லைச் சிறுமியின் விவகாரம் அணுகப்படவேண்டும். அதன் தாற்பரியமும் அதுவே.


பாலியல் துஷ்பிரயோகங்களுக்குப் பின்னரான சமூகமயப்படுத்தலில் மட்டுமல்ல, போதைப்பாவனைக்கு எதிரான புனர்வாழ்வு நடவடிக்கைகளின் பின்னரான சமூகமயப்படுத்தலில்கூட 'மீண்டும் நிகழாமையை' உறுதிப்படுத்தும் முனைப்பு எமது 'மறுவாழ்வுக் கட்டமைப்பில்' இல்லை. போதைப்பொருள்கள் மீளவும் இலகுவாகக் கிடைக்கக்கூடிய வழிகளை – கதவுகளை அடைக்காமல், மறுவாழ்வு என்ற பெயரில் சிறுவர்களை – யுவதிகளை – இளைஞர்களை சிலகாலம் காப்பகங்களில் வைத்திருந்துவிட்டு மீண்டும் அதே இடத்தில் – அதே ஏதுநிலைகளுக்கு மத்தியில் கொண்டுசென்று வாழ்விப்பதானது அவர்களை மேலும்நெருக்கடிக்குள்ளும்பாதுகாப்பற்றநிலைக்குள்ளுமே தள்ளும். அசௌகரியங்களையே ஏற்படுத்தும். இதனால்தான் மறுவாழ்வு பெற்றுச்சென்ற பலர் மீண்டும் மீண்டும் போதைக்கு ஆட்படுகின்றனர்.

இந்தக் குறைந்தபட்சப் புரிதலுடன் இந்த விடயம் அணுகப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படும் சமூக மயமாக்கல்தான் இன்றைய காலத்தேவையாகவும், இதுவிடயத்தில் உறுதிப்பாடான தீர்வாகவும் உள்ளன. போர்க்குற்றங்களுக்கு மட்டுமல்ல, இதுபோன்ற சிறுவர்களுக்கு எதிரான பாலியல், போதைப்பொருள் வதைகளுக்கு எதிராகவும் 'மீள நிகழாமை' உறுதிப்படுத்தப்பட வேண்டியது கட்டாயமானதும் தவிர்க்கப்பட முடியாததுமாகும்.

## நாளொரு நல்வார்த்தை

விடுதலை பெறுவதற்கு இன்றியமையாதது, அதற்கான உணர்ச்சிக்கு ஊறு நேரிடாதபடி பார்த்துக்கொள்வதும், உணர்ச்சி பெற்றவர்களின் நிலையை உண்டாக்குவதுமாகும்.

– பேரறிஞர் அண்ணா



# 'நிபா' வைரஸ் அச்சுறுத்தல்; உயிரியல் ஆய்வகம் 'அவுட்'

## தொழில் வல்லுநர்கள் சங்கம் குற்றச்சாட்டு

**கொழும்பு, செப்.24**

**'நிபா' வைரஸ் அச்சுறுத்தல் தொடர்பில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டுவரும் தற்போதைய காலகட்டத்தில், கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள உயிரியல் ஆய்வகம் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது என்று சுகாதாரத் தொழில் வல்லுநர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

1999ஆம் ஆண்டு மலேசியாவில் முதன் முதலில் கண்டறியப்பட்ட 'நிபா' வைரஸால் அண்மையில் இந்தியாவில் ஆறு பேர் பாதிக்கப்பட்டதுடன், இருவர் உயிரிழந்துள்ளனர். இது இலங்கைக்குள் ஊடுருவலாம் என்று அஞ்சப்படும் நிலையில் மேற்படி உயிரியல் ஆய்வகம் செயலிழந்துள்ளமை பின்னடைவு என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, 'நிபா' வைரஸ் பரவல் ஏற்பட்டு 4 முதல் 14 நாள்களுக்குள் காய்ச்சல், தலைவலி, வயிற்று வலி, வாந்தி, தொண்டை வலி போன்ற அடிப்படை அறிகுறிகள் ஏற்படும் எனவும், அடையாளம் காணப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படவேண்டும் என்றும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

'நிபா' வைரஸ் மனிதனிலிருந்து மனிதனுக்கு பரவுவதைத்தடுக்க, நோயாளிகளைக்கையாள்வதில் பாதுகாப்பான நடைமுறைகளை பின்பற்றுவதுடன், நோயாளர்களின் உடலில் திரவங்கள் ஏற்படுவதனை தவிர்க்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

# பாதாள உலகக்குழுவின் சூத்திரதாரிகள் டுபாயில்!

கொழும்பு, செப். 24

இலங்கையில் அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களின் பிரதான சூத்திரதாரிகள் டுபாயில் உள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் நிகால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் அண்மைக்காலமாக இடம் பெறும் வன்முறைக்கும்பல்களின் பிரதான சூத்திரதாரிகள் டுபாயில் இருப்பதால் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதில் சில நடைமுறைச்சிக்கல்கள் உள்ளன. பிரதான சூத்திரதாரிகளின் அடியாள்களே இங்கு உள்ளனர்.

எனினும் பிரதான சூத்திரதாரிகளை கைது செய்வதற்கு சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் - என்றார்.

(ம-6)

**நாளை** 25.09.2023 திங்கட்கிழமை புரட்டாதி 08

சுபநேரம் : 12.02 – 01.32

ராகுகாலம் : 07.32 – 09.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

3ஆம் குறுக்கு வீதி, மணியம் தோட்டம், கொழும்புத்துறையில் வீடு வாடகைக்கு உண்டு. (மாத வாடகை - 10,000/=) பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 440 0610, 074 114 8928**

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள Sisil குளிர் சாதனப்பெட்டி, தேக்கிலான பெட்டகம், சிறிய ரீப்போக்கள், தேக்கு அலுமாரி, மர விறாந்தைக் கதிரைகள் மேலும் பல வீட்டுப்பாவனைப் பொருட்கள்.

தொடர்பு: **077 922 0595, 077 704 5840**

## இலவச Taxi Meter

நீங்கள் உங்கள் வாகனங்களுக்கு PickMe Taxi meter இல் இணைக்க அழைக்கவும். (முச்சக்கர வண்டி / CAR/ VAN/ மோட்டார் சைக்கிள்)

**077 473 7737**

(CS22233) (N.1)

## நல்லூரில்
## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

யாழ் நல்லூர் முத்திரைச்சந்திக்கு அருகாமையில் 1 1/2 பரப்புடன் நல்ல சூழலில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

**070 - 1700976**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌவரவ (V). 47 வயதான கணினி ஆசிரியருக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை. சமயம் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. சீதனம் திருமணச்செலவுகள் எதிர்பார்க்கப்படமாட்டாது.

**075 113 2599**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் தனிமையில் வாழும் ஆரோக்கியமான 60 வயது ஓய்வூதியருக்கு வாழ்கைத் துணை தேவை.

**076 576 8174**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஓட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட் செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## தேவை

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள சட்ட நிறுவனத்திற்கு பெண் உதவியாளர் தேவை. மாலை 5 மணிமுதல் மாலை 7.30 மணிவரை பணிபுரியக்கூடியவர்.

**077 356 3857**

## கடையுடன் காணி விற்பனைக்கு

கரந்தன் வீதி, உரும்பிராயில் கடையுடன் காணி விற்பனைக்குண்டு.

**077 476 6174, 077 550 1943**

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் 10.09.2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருமண வைபத்தின் பின்னர் கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் கீழ்வரும் தொலைபேசிக்கு தொடர்புகொள்ளவும்.

**077 644 7386**

## பெண் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் தங்கி நின்று வேலை பார்ப்பதற்கு பெண் வேலையாள் தேவை.

**077 501 6255**

## காணி விற்பனைக்கு

புத்தூர் மேற்கு, நவற்கிரி சந்திக்கு அருகில் 14 பரப்புத் தோட்டம் விற்பனைக்கு. இரண்டு பேர் இரண்டாக்கி வீடும் கட்டலாம்.

**077 706 6487**

## களஞ்சியசாலை தேவை

யாழ் நகரிலிருந்து 5 கி. மீ. சுற்றுவட்டத்தில், பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்துள்ள, 2000 ச. அடி கொண்ட களஞ்சியசாலை குத்தகைக்குத் தேவை.

தொடர்பு:
**070 323 4350** (திரு. ரீ. சுரேன்)

## கடை வாடகைக்கு தேவை

யாழ். நகரப்பகுதியில் (மத்தியில்) கடை வாடகைக்கு தேவை.

**077 082 1010**

(cs 52209) (N-1)

## காணவில்லை

வெள்ளை நிற லாபரேடர் இன நாய் வெள்ளிக்கிழமை (22.09.2023) அன்று இரவு 9 மணியளவில் காணாமல் போயுள்ளது. இதைக் கண்டறிந்தவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**078 495 7847**
**074 229 2107**
**021 221 4479**

ராஜா கிறீம் ஹவுஸ்
198, கோவில் வீதி,
கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக.

(CS 52234) A-1

## Sales Representatives
### (ஆண்கள்) தேவை

வடக்கு/கிழக்கு மாகாணத்தில், விநியோகஸ்தர்களுடன் பணி புரிய Sales Representatives தேவை.

Driver (ஆண்) - செல்லுபடியாகும் Heavy vehicle driver license வைத்திருக்க வேண்டும்.

தங்குமிட வசதி வழங்கப்படும்.

மின்னஞ்சல் / அஞ்சல் வழியாக 10 நாட்களுக்குள், விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**THE TRADES MINES PETROLEUM (PVT) LTD**
**(Importers of Lubricants and Auto care Products)**
**NO:315, SEA STREET, COLOMBO 11.**
**E-Mail: lubricant@trademines.lk**
**Phone:011-4002234 / 0765911831**

CS 25045 (3x10) A-1

## தென்மராட்சி அபிவிருத்திக் கழகம்
### 22.09.2023
## பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தல்

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்திற்கான பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபை தெரிவும் எதிர்வரும் (08.10.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல உறுப்பினர்களையும் கலந்துகொண்டு சிறப்பிப்பதுடன், ஒத்துழைப்பு வழங்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

அ.கயலாயப்பிள்ளை, தற்காலிக தலைவர்.
ந.பாலசந்திரன் செயலாளர்.

(CR 40627) A-1

## வல்லிபுர மாயவனுக்கு வெண்ணெய்த் திருவிழா

யாழ், செப். 24

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவத்தின் 10 ஆவது திருவிழாவாகிய வெண்ணெய்த்தாழி திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்புற இடம்பெற்றது.

விநாயகர், வல்லிபுர ஆழ்வார், சீதேவி, பூமாதேவி, சங்கு, சக்கரத்தாழ்வார், ஆண்டாள் ஆகிய தெய்வங்கள் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

தொடர்ந்து வடமராட்சி இளைஞர்களால் கண்ணனின் வெண்ணெய்த்தாழி திருடி உண்ட இதிகாச வரலாற்றை எடுத்துக் காட்டும் வகையில் நாடகம், நடன நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டன.

(ச-27)



## யாழ் வணிகர்கழகத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு

யாழ். வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 16.09.2023 அன்று யாழ். வணிகர் கழகப்பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெற்றது.

அதில் யாழ். வணிகர் கழகத்தின் **தலைவராக இ.ஜெயசேகரன்** அவர்களும் **உபதலைவர் ந.ஜெயமோகன், செயலாளர் சி.கேசவன், உபசெயலாளர் இ.ஜனக்குமார், பொருளாளராக செ.கஜன் ஆகியோர்** ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 16 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவாகியுள்ளனர்.

**யாழ். வணிகர் கழகம்**
**165, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(cr 40623 (N.1)

## இயந்திராதிகள் விற்பனைக்கு

- 3Hp மோட்டார் தொடக்கம் 30 Hp மோட்டார் வரை
- மின் பிறப்பாக்கிகள் (ஜெனறெற்றர்)
- நல்லெண்ணெய் ஊற்றும் இயந்திரங்கள் (OiL Expeller)
- நெல் உடைக்கும் இயந்திரம்
- நெல். அரிசியில் கல் நீக்கும் இயந்திரம்
- ஈர அரிசியை மாவாக்கும் இயந்திரங்கள்
- ஈர உழுந்து அரைக்கும் இயந்திரங்கள்
- மா வறுக்கும் இயந்திரம்
- கோப்பி அரைக்கும் இயந்திரங்கள்
- தன்னியக்க பொலித்தீன் சீலர் (Autometic polithienseler)
- உரபாக் தைக்கும் இயந்திரம்
- வெண்ணெய் கடையும் இயந்திரம்

தொடர்பு: **077 494 9683**

(cs.26341 (N.1)

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

ஆஸ்பத்திரி வீதி, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்துறையில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

**076 - 8096254**

## யாழ்ப்பாணம்
### கந்தர்மடம் கைதடியில் அறை வாடகைக்கு

மாணவர் தொழிலாளருக்கான அறை அனெக்ஸ் மற்றும் களஞ்சியம் வோக்சொப் தனியார் வகுப்பு அமைக்க காணிகளும் உண்டு.

**078 - 5679674**
**076 - 9870346**

## கொல்லிமலை மாந்திரீகம்
### THE MOST POWER FULL

உங்கள் காரியம் எதுவானாலும் வன்சொட்டில் முடிக்க முடியும். ஓயாமல் வாட்டும் பிரச்சனைகள் மாயமாய் மறையும். நிம்மதியும் சந்தோஷமும் கைக்கோர்க்கும். பிரிந்த பிரச்சனைப்பட்ட காதலர்களையும், தம்பதியினரையும் அவசரம், அவசியம் அறிந்து ஒன்று சேர்க்க முடியும். உங்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டு அடங்கி இணக்கமாக நடப்பார்கள். நீங்கள் பிரச்சனைகளால் தடுமாறும் போது சரியான தீர்வு நாங்கள் கொடுப்போம்.

வெற்றி அழைக்கிறது சகலமும் கிடைக்கிறது

ஓயாமல் வாட்டும் பிரச்சினைகளும் மாயமாய் மறையும்

குறைந்த கட்டணம்

நேரில் வராமலும் காரியங்களை சாதித்துக்கொள்ளலாம்.

**Call : 077 405 7868**
**Service by post also Available**
சுவாமி ஜீ ஜெய ஸ்ரீ
**For Contact : 077 405 7868**

**MASTER OF BLACK MAGIC**

உங்கள் கவலைகள் எல்லாம் தீர்ந்து நிம்மதி கிடைக்கும். குடும்ப வாழ்க்கை பிரகாசம் ஆகும்.

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் நகரில் தனி வகுப்பு
**G.C.E O/L, A/L,** பட்டதாரிகள்
தொழில்புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு

K.Ganesh B.A **077 766 8725**

## THE MOST AWAITED LAND PLOTS FROM KOTTAWA TOWN

Unmachable land plot nestled in the serene beauty of Kottawa town.

- tranquil Environment
- 400m to High-level road
- 450m to Kottawa Highway entrance
- 600m to Makumbura Multi-Modal Hub
- Close to Supermarkets, Hospitals, Schools and More!

Earth Lanka Holdings (Pvt) Ltd
Trusted Real Estate Partner ...

**For More Details : 0773580425**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 26 • 01 • 1959

மறைவு 23 • 09 • 2023

## சிவானந்தம் நாகேஸ்வரி

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தம் நாகேஸ்வரி நேற்று (23.09.2023) சனிக்கிழமை அதிகாலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், சிவானந்தம் (ஓய்வு நிலை கிராம அலுவலர் - பிரதேச செயலகம் - கோப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும், தபிரா (ஆசிரியை - மு / புதுக்குடியிருப்பு R.C வித்தியாலயம்), தயூரா (ஆசிரியை - கிளி / திருவையாறு மகா வித்தியாயலம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்சன் (இலங்கை வங்கி), அவர்களின் அன்பு மாமியும், நாகேந்திரன் (கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும், கலாகுமாரி (கனடா), வசந்தகுமாரி, நித்தியானந்தம், ஜெயானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவித்தாள் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 711 0160
077 303 0240

(cr. 40630) (N-1)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 23 • 08 • 1943

மறைவு 25 • 08 • 2023

## அமரர் கார்த்திகேசு உருத்திரசுந்தரம் (கடவுள்)

(முன்னைநாள் சாலை முகாமையாளர், இ.போ.ச. காரைநகர்)

எம்குல சூரியன் எமைப் பிரிந்து
இறை யடி சரண் புகுந்து
ஒற்றைத் திங்கள் தான் ஆனதுவோ
நீர்காட்டிய வழியும் ஊட்டிய துணிவும்
என்றுமே எமை வழி நடத்தும்
எனும் பெரு மிதம் கொண்டே
வாழ்வோம் நாம் நின்னை மறவாமல்

எமது குல தெய்வத்தின் மறைவினால் நாம் துயருற்றிருந்த நேரத்தில் சகல வழிகளிலும் எமை ஆறுதல் படுத்தியோருக்கும் இறுதிக் கிரியைகளின் போது உதவிகள் புரிந்தோருக்கும் இன்னலுற்ற வேளையில் தோள் கொடுத்தோருக்கும் எமது அன்பு கலந்த பணிவான நன்றிகள்.


" உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து"

புலம் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.

நன்றியுடன்
குடும்பத்தினர்.

(CS 52236) A-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 06 • 10 • 1947

மறைவு 23 • 09 • 2023

## அரியகுட்டி வீரசிங்கம்

(முன்னாள் கனேசானந்தா ஸ்ரோர்ஸ், யாழ். மருந்தகம் WESCO, சிற்றி மெடிக்கல்ஸ் ஊழியர்)

வட்டு வடக்கு சித்தன்கேணியினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி வீரசிங்கம் நேற்று (23.09.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி செல்லம்மா தம்பதியரின் பாசமிகு 3வது புதல்வரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை செல்வரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜீவாவின் பாசமிகு கணவரும், சிவாஜினி (சுவிஸ்), சிவாகரன் (அதிபர்- யா/சங்குவேலி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்வேஸ்வரன் (சுவிஸ்), கோகிலவாணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கால்நடை வைத்திய அலுவலகம், முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தாமிரா, தனோஜன், தனோஜினி ஆகியோரின் பாசமிகு பேரனாரும், காலஞ்சென்ற சின்னையா, கனகம்மா, புவனேஸ்வரி மற்றும் பேரம்பலம், விமலாதேவி, கமலநாயகி, பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அமரர்களான சுப்பையா, தவராசா, சிவபாதம், பத்மாதேவி ஆகியோரினதும் ராசலட்சுமி, சண்முகலிங்கம், மாலா, கிருஸ்ணானந்தன், கவீந்திரன், தயானந்தன், வாணி, உமா, ரவீந்திரன், கலா, புலேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் காலை 9.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் சுழிபுரம் புளியந்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: 077 800 9284

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 • 07 • 1941

மறைவு 22 • 09 • 2023

## முத்தையா இராஜேஸ்வரி

கொழும்பைப் பிறப்பிடமாகவும் விதானையார் வீதி, ஈச்சமோட்டை, இல. 6,2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா இராஜேஸ்வரி நேற்றுமுன்தினம் (22.09.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சிவபாக்கியம் தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் முத்தையா அவர்களின் அன்பு மனைவியும், சண்முகலிங்கம், புவனேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேகலாகாந்தி (சுவிஸ்), பிரேமளா (கனடா), பிறேமானந்தன் (சுவிஸ்), மனோகரன் (பொறியியலாளர்), கோமளா (சுவிஸ்), திருக்குமரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

இல.6,2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.


தகவல்:
மு.மனோகரன் (மகன்)
077 773 9859
ம.மேகலா (மருமகள்)
076 668 8423

(cs. 52241) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
16 - 06 - 1974



உதிர்வு
25 - 08 - 2023

கடந்த 25.08.2023 அன்று சிவபதமடைந்த

### அமரர் சுப்பிரமணியம் மணிதரன் (மதன்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்ற வேளையில் நேரிலும் தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பதாகைகள் காட்சிப்படுத்தியோருக்கும் உடனிருந்து உதவிய அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மடத்தடி வீதி,**
**கொடிகாமம்** — **குடும்பத்தினர்**

(cr.40628) (N.1)

## தச்சு தொழிலாளி தேவை

கூரை வேலை மற்றும் மரத்தளபாட வேலைகளில் அனுபவம் வாய்ந்த தச்சுத் தொழிலாளி உடன் தேவை (Carpenter)

தொடர்பு: **077 251 4981, 077 872 9806**


நேரில் சமூகம்தரவேண்டிய முகவரி:
**195, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(195, Temple Road, Nallur, Jaffna)**

(Cr 40626) N.1

## மரண அறிவித்தல்

### கந்தையா குணேந்திரதாசன்

(இளைப்பாறிய FORUT, Program Officer)



தொல்புரத்தை பிறப்பிடமாகவும், கந்தர்மடம் மற்றும் இடைக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணேந்திரதாசன் அவர்கள் கடந்த (17.09.2023) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வமணி அவர்களின் ஆருயிர் கணவரும், தொல்புரத்தை சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா, தங்கரட்ணம் (ஆசிரியை) ஆகியோரின் மகனும், இடைக்காட்டை சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா, பொன்னம்மா ஆகியோரின் மருமகனும், நந்தினி, தர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திவகார், நவரோசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வேணுசா, நிவித்தா, நித்தேஷ் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மகேந்திரராஜா, தனேந்திரராஜன் (லண்டன்), இந்திராணி (மாத்தளை), பஞ்சேந்தராஜன், சர்வலோகநாயகி (றஞ்சி - பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திராணி, சந்திரவதனா, தவயோகநாதன், சலோசனா, ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது மாரியந்தனை இடைக்காடு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பகர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாரியந்தனை,**
**இடைக்காடு.**
தொடர்புகட்கு
சுஜிகரன் (பெறாமகன்)
077 109 9587

தகவல்:
செல்வமணி (மனைவி) - +94 76 810 8210
நந்தினி (மகள்) - +44 7415 408746
தர்சினி (மகள்) - +61 415 083539
தனேந்திரராஜன் (சகோதரன்) - +44 7915 405 124
இந்திராணி (சகோதரி) - +94 77 6544 830
பஞ்சேந்திராஜன் (சகோதரன்) - +94 77 9850 005
சர்வலோகநாயகி (சகோதரி) - +33 782 629675

(cs 52242) (N-1)

## நிறுவை, அளவை முத்திரையில்லை

கிளிநொச்சி வியாபாரிகள் மீது சட்டநடவடிக்கை


கிளிநொச்சி பொதுச்சந்தைப் பகுதியிலுள்ள வியாபார நிலையங்களில் இந்த வருடத்துக்குரிய நிறுவை, அளவைகள் முத்திரையிடாத உபகரணங்களை வைத்திருந்த வர்த்தகர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் கிளிநொச்சி சந்தைப்பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன.

இதன்போது உரிய காலத்தில் அரச அளவீட்டு நியமங்கள் பெறாத தராசுகளை 3 வர்த்தக நிலையங்கள் பயன்படுத்தி வந்தமை கண்டறியப் பட்டது. அதற்கமைய குறித்த 3 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ச-214,113)

## மரண அறிவித்தல்



### வீரசிங்கம் சத்தியநேசன்

பிறப்பு 24-02-1954 — இறப்பு 21-09-2023

ஏழாலை சாடியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சத்தியநேசன் 21.09.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிட்டிணன் ஆத்தப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், வசந், நிஷந், காலஞ்சென்ற சர்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தஜேந்தினி, செந்தில்வேல் ஆகியோரின் அன்பு மாமனாரும், பவிஷன், அபிசாலினி ஆகியோரின் பாசமிகு பேரனும், இன்பமலர், ஞானமலர், சாந்தமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை, உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**சாடியடி,**
**ஏழாலை.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**074 1474 869**

(cs 24132) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு
16 - 05 - 1951



இறப்பு
23 - 09 - 2023

### கனகரத்தினம் திருச்செல்வம்

நீர்வேலி தெற்கு பூதர்மட ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் 44/14 A சங்கிலியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் திருச்செல்வம் அவர்கள் நேற்று (23.09.2023) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. கனகரத்தினம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. செல்லத்துரை - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், மதீஸ்சன், காயிஸ்திரி, கேதீஸ்வரி, விஜெய், மதிவர்ணன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், வட்சலகுமாரி, அனித்தா, துவராகா, ரேணுகாதேவி, செந்தூரன், சுதாகரன், சிவதர்ஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கபிலாஷினி, பிரதிஸ்ஷா, அமிலியா, மிலேஸ், சாத்விகா, திபிஷிகா, அகல்யா, மயிலாராணி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரப்பிள்ளை, சபாரத்தினம், இராஜராஜஜேஸ்வரி, முருகேசு, இராஜரத்தினம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்றவர்களான இலட்சுமி, தனலட்சுமி செல்வரட்ணம் மற்றும் கமலநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**44/14A, சங்கிலியன் வீதி,**
**நல்லூர்.**

தகவல் :
**குடும்பத்தினர்**
**070 620 4003,077 900 4003**

(CS 52245) (K-1)

## சுங்கத்தால் பறிக்கப்பட்ட பொருள்கள் ஏலத்தில்

கொழும்பு, செப்.24

இலங்கை சுங்க திணைக்களத்தால் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் இணையத்தில் ஏலம் விடுவதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

விஸ்வகர்ம குலத்தைச் சேர்ந்த Ph.D பட்டம் பெற்று அமெரிக்காவில் வேலை பார்க்கும் 33 வயதான செவ்வாய்க் குற்றம் அற்ற மகளுக்கு அமெரிக்காவில் வசிக்கும் பட்டதாரி மணமகன் தேவை.

தொடர்பு இல: **071 6353 776**

## விற்பனையாளர் தேவை

ஆங்கில அறிவுடைய பெண் விற்பனையாளர் தேவை. அண்மையில் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**SOLA CHEMICAL COMPANY OUTLET**
**KANTHARMADAM JAFFNA,**
**CONTACT NO:0777 495 494**

## வாடகைக்கு விடப்படும்

மணிக்கூட்டு ஒழுங்கை நாவலர் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள மாடிக்கட்டடத்தில் 2 ஆம் மாடி வாடகைக்கு உண்டு. (36' X 36')

**077 711 0007**

(cs 26350) (N-1)

## விற்பனைக்கு

லயன் பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**077 172 1074**

(cs 57746) (N-1)

## காணி விற்பனைக்குண்டு

கோண்டாவில் பழனி ஆண்டவர் கோவிலுக்கு அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்புகொள்ளவேண்டிய திகதி 25.09.2023

**077 882 2847**

(cs 52254) (N-1)

## யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

*கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Beautician*
மணப்பெண் அலங்காரம், பலவிதமான சேலை அணியும் வகுப்புகள்.
சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன.
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

## வீட்டு பணிப்பெண் தேவை

யாழ். நகரில் வீட்டிற்கு வேலை செய்யக் கூடிய 25 - 45 வயதுக்குட்பட்டவர்கள் தேவை.
வேலை நேரம் - 6 மணி - 2 மணிவரை அல்லது 9 மணி - 4 மணிவரை
நாள் சம்பளம் உணவுடன் 1000/= ரூபா வழங்கப்படும் தங்கிநின்று வேலைசெய்ய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(CS 26354) A-1

தொடர்பு: **077 6160 338**

## பெண் விற்பனையாளர் தேவை

விக்ரோரியாக் கல்லூரிக்கு முன்பாக உள்ள கட்டடத் தொகுதியில் உள்ள Terrazzo Marble கடை ஒன்றிற்கு பெண் விற்பனையாளர் தேவை. கணினி அறிவு உள்ளோர் விரும்பத்தக்கது.

**077 222 1220, 074 004 9458**

(CS 52240) N-1

## மணமகள் தேவை

கொழும்பில் வசிக்கும் கண்டி பௌத்த சிங்கள பெற்றோர் தமது மகனுக்கு தமிழ் மணமகள் தேடுகிறார்கள்.

மணமகன் 34 வயது 5 அடி 8 அங்குலம். அழகானவர். உதவி சுங்க அத்தியட்சகர் (A.S.C) Edith Cowan University, Australia ல் பட்டபடிப்பு முடித்து பின் CARDIFF University U.K சட்ட பட்டப்படிப்பு MASTER முடித்துள்ளார். மாலபேயில் 200 மில்லியன் சொத்து உரிமையாளர் (வீடு. வாகனம்). சகோதரி ஒருவர் மட்டும். M.B.B.S கொத்தலாவல பல்கலைக் கழகத்தில் 2nd Upper Pass பண்ணியவர். Internship Novemebr 2023 தொடக்கம்.

25-30 வயதான A/L படித்த, அழகான சமய விழுமியங்களை பாதுகாக்கக்கூடிய தமிழ் மணமகளை தேடுகிறார்கள்.

சொத்து / சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

**0112080314** மாலை 7.00 மணிக்கு பின் **or**
**E-mail : deeemes@gmail.com.**

(CS 26351) A-1

## நூல் வெளியீடு

யாழ் செப். 24 பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் எழுதிய 30 கோவில்களின் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை முன்னாள் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பண்டிதர் நா.கடம்பேஸ்வரன் நூலின் வெளியீட்டுரையை ஆற்றவுள்ளார். நூலின் ஆய்வுரையை வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் ஆற்றவுள்ளார். (ச-66)

## மரண அறிவித்தல்

### திருமதி வாமதேவன் மங்கையற்கரசி



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் லோட்டன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாமதேவன் மங்கையற்கரசி நேற்று (23.09.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மானிப்பாய் லோட்டன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


தோற்றம் 05.03.1936 | மறைவு 23.09.2023 | லோட்டன் வீதி, மானிப்பாய். 071 8683 886

(CS 52231)A-1

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 01 . 1968



இறப்பு 22 . 09 . 2023

### திரு.சந்தனம் செல்வக்குமார் (ஆச்சாரி பத்தர்)

நாவலப்பிட்டியை பிறப்பிடமாகவும் இல.30/1, கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. சந்தனம் செல்வக்குமார் கடந்த (22.09.2023) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தனம் திருமதி விசாலாட்சி தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான குலசிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விமலேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் தேனுஷா, மயூரதாஸன், தினுக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காண்டீபன், சுரேக்கா, பிரியங்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், சபீஸ்னா, சர்வினா, சஸ்வின், ரித்தியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2023) ஞாயிற்றுக் கிழமை அரவது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன்மனல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தொ.பே: மயூரதாஸன் - 075 765 6803
தினுக்குமார் - 075 042 4635

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26353) A-1

## மரண அறிவித்தல்



### தில்லையம்பலம் செல்வரத்தினம் (சாமி)

பிறப்பு 13.12.1948 | இறப்பு 22.09.2023

யாழ். தெல்லிப்பளை, வித்தகபுரம், தையிட்டி புலத்தினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் செல்வரத்தினம் அவர்கள் (22.09.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் தங்கப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் நவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கிருஷ்ணகுமாரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகையா, செல்லம்மா, குணராஜசிங்கம், சிவபாலரத்தினம் மற்றும் யோகாம்பிகை ஆகியோரது அன்புச் சகோதரனும், கல்யாணி, கார்த்திகா, காங்கேயன், கவிதா, கேசவன் ஆகியோரது அன்புத் தந்தையும், உதயகுமார், உருத்திரேந்திரன், செந்தில்ரூபன் ஆகியோரது அன்பு மாமனாரும், கபிலேஸ், உமேசனன், அமிர்தபாஷினி, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 26349)(k-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூழல் பாதுகாப்புச் சிந்தனையை சிறுவயது முதல் ஊட்டுங்கள்

## யாழ்.மாவட்டச் செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 24

அனைவருக்குமே நம் நாட்டின் சுற்றுச்சூழல் பற்றிய அக்கறை இருக்கவேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பின்னடைவைச் சந்தித்துள்ள நாம் சிறுவயது முதல் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சிந்தனையை வலுவூட்ட வேண்டும் - இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்ட கலந்துரையாடல் யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பிரதம விருந்தினராக பங்கேற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நம் அனைவருக்குமே நம் நாட்டின் சுற்றுச்சூழல் பற்றிய அக்கறை இருக்கவேண்டும். பொறுப்பற்ற தன்மையும், சட்டத்தை மதியாமையும், மனப்பாங்கில் மாற்றம் ஏற்படாமை உள்ளிட்டவை சூழல் பாதுகாப்பில்பின்னடைவை ஏற்படுத்துகிறது.

எனவே சிறுவயது முதல் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சிந்தனை வலுவூட்டப்படவேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் சகல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் திட்ட மிடலை தூரநோக்குடன் வகுத்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கடமையாகும்- என்றார் (ச-27)

# தொப்புள்கொடி உறவுகளின் வாழ்வாதாரத்தை அழிக்காதீர்!

## மன்னார் மீனவ சங்கத் தலைவர் ஆதங்கம்

மன்னார், செப். 24

**இந்தியா எம்மை தொப்புள்கொடி உறவு என்று தெரிவித்துக் கொண்டு எங்கள் கடல் வாழ்வாதாரத்தை உறிஞ்சி வருகிறது. 40 வருடங்களாகத் தொடரும் அவர்களின் அத்துமீறல்களைத் தடுக்க இலங்கைக் கடற்படையிடம் திராணியில்லை.**

-இவ்வாறு மன்னார் மாவட்ட கடற்றொழில் பேரவைத் தலைவரும் , பள்ளிமுனை மீனவ சங்கத் தலைவருமான அந்தோனி எட்வேட் சில்வெஸ்ரர் றோச் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைப் படகுகள் மன்னார் வளைகுடாவுக்குள் கடந்த நாற்பது வருடங்களாக எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுகின்றன.

நாங்கள் இலங்கைக் கடல் எல்லையைத் தாண்டிப்போகமுடியாது. மீறிச் சென்றால் விடுதலையின்றி சிறைவாசம் விதிக்கப்படுகிறது.

ஆனால் இந்திய மீனவர்கள் எவ்வாறு வருகின்றனர் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இலங்கை அரசும் முப்படைகளும் இதனைக் கண்டும் காணாது இருப்பதே இதற்கு வழிவகுக்கிறது.

இந்திய மீனவர் அத்துமீறலால் மன்னார் வளைகுடாவில் மீன்கள் உற்பத்தியாகும் பவளப்பாறைகள் அழிவடைகின்றன. மீனவர்களின் வாழ்வாதாரம் இழக்கப்படுகிறது.

எம்மைத் தொப்புள் கொடி உறவுகள் எனக் கூறிக்கொள்ளும் அவர்கள் எம் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை உணர்ந்துகொள்ளவில்லை. இதற்கு விரைந்து தீர்வு எடுக்காவிடில் இங்குள்ள மீனவர்கள் அபாய நிலைக்குத் தள்ளப்படுவர் - என்றார். (ச-60)

*நிரந்தர நியமனத்தில்*

# வடக்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஒப்பந்தப் பணியாளர் புறக்கணிப்பு!

## உள்ளீர்க்குமாறு சிறீதரன் எம்.பி. மனு

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில் தொடர் சேவையாற்றிவரும் 406 வெளிவாரிப் பணியாளர்கள் இந்த நியமனத்துக்குள் உள்ளீர்ப்புச்செய்யப்படவில்லை. அவர்களையும் உள்ளீர்ப்புச் செய்ய ஆவன செய்ய வேண்டும்-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்,

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

உள்ளூராட்சிமன்றங்களின் சேவைப்பரப்பினுள் திண்ம, திரவக் கழிவகற்றல் உள்ளிட்ட இடர் மிகு ஏராளமான பணிகளை சமூகச் சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் இந்த ஒப்பந்தப் பணியாளர்கள் செவ்வனே நிறைவேற்றி வருகின்றனர்.

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களில் 180 நாள்களைக் கடந்து தொடர்ச்சியாகக் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் வடக்கு மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர் சேவையில் ஈடுபட்டு வரும் 406 வெளிவாரிப் பணியாளர்கள் இந்த நியமனத்துக் குள் உள்ளீர்க்கப்படாததால் அவர்கள் மோசமான பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளனர்.

எனவே உள்ளூராட்சிமன்றங்களை முழுமையாக நம்பியுள்ள அவர்களையும் அவர்களது குடும்பங் களை யும் வாழ்வாதார ரீதியாக பிடிமானமளிக்க இதுவிடயத்தில் கரிசனை கொண்டு நிரந்தர நியமனம் வழங்க ஆவன செய்யவேண்டும் - என்றுள்ளது. (ச-113)



# சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு 12ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை அதிபர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

மேற்படி பாடசாலை மாகாண விளையாட்டுப் போட்டியில் 80 புள்ளிகளைப் பெற்று ஆண்கள் பிரிவில் மன்னார் வலயத்தில் முதலாம் இடத்தையும் மாகாண ரீதியாக இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் வெற்றிக் கிண்ணங்கள் கையளிக்கப்பட்டன. (ய-213)



# சிறுவர் மகிழ்வூட்டும் விழா

கிளிநொச்சி, செப். 24

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட வினாசியோடை மகா வித்தியாலயத்தில் சிறுவர் மகிழ்வூட்டும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் சிறுவர், பெண்கள் பிரிவினரின் ஏற்பாட்டில் வித்தியாலய பதில் அதிபர் இ.வினோதராஜ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் சிறுவர்களுக்கு மகிழ்வூட்டும் விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

வினாசியோடை மகா வித்தியாலய பதில் அதிபர் இ.வினோதராஜ், ஆசிரியர்கள், சிறுவர் மகிழ்வக நிறுவன உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் சிறுவர் பெண்கள் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளதுணை உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலர் நிகழ்வில் பங்கேற்றனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு சீனாவின் தண்டவாளம்

கொழும்பு, செப். 24

சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு 10 ஆயிரம் ரயில் தண்டவாளங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை பிரதான ரயில் மார்க்கத்தில் மஹவ முதல் கொழும்பு வரையிலான வளைவுகளுடன் கூடிய இடங்களில் பொருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ்.குணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதிகளில் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்படாவிட்டால், ரயில்கள் தடம்புரளும் சம்பவங்கள் பதிவாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)



# ரயில் கட்டணங்கள் விரைவில் கூடலாம்

கொழும்பு, செப்.24

ரயில் கட்டணங்களில் அதிகரிப்பு ஏற்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரயில்வே திணைக்களத்துக்குக் கிடைக்கும் மாதாந்த வருமானம் சுமார் 19 ஆயிரம் ரயில்வே ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்குப் போதுமானதாக இல்லை. அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று திறைசேரி தெரிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றிய பின்னர், அனைத்து ரயில் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பாகவும், பயணப் பற்றுச்சீட்டுத் தொடர்பில் மாற்றங்களைக் கொண்டுவருவதிலும் போக்குவரத்து அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அனைத்து ரயில் கட்டணங்களையும் தற்போதுள்ள குறைந்தபட்ச கட்டணமான 20 ரூபாவில் இருந்து பஸ் கட்டணத்துக்கு இணையாக அதிகரிக்க அமைச்சு அதிகாரிகள் முன்மொழிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)








தென்மராட்சிக் கல்வி வலயம் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடத்திய வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் ஆசிரியர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி முதலாம் இடத்தையும் வரணி மத்திய கல்லூரி ஆசிரியைகள் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன. (ச-15)



சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நாடு கடந்த லயனிச செயற்றிட்டத்துக்கு இலங்கை லயன்ஸ் கழகமான 306 மாவட்டத்தின் வலயம் 14 தலைவரான இ.ஜெயக்குமார் 50 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளார். சென்னையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தீவகம் லயன்ஸ் கழகமும், யாழ்ப்பாணம் கோல்ட் சிற்றி புதிய நூற்றாண்டு லயன்ஸ் கழகமும், கொக்குவில் லயன்ஸ் கழகமும் பங்குபற்றியிருந்தன. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்பு

புதிய கம்பனிக்கு உத்தியோகத்தர்கள் தேவை ஆண், பெண்
உங்கள் கல்வி தகமைக்கு ஏற்ப பதவிகள் வழங்கப்படும்.
வட மாகாணம் முழுவதும் தேவை

**076 1124 145**

## ஆட்டுக்கடா விற்பனைக்கு உண்டு

ஆட்டுக்கடாக்கள் இரண்டு விற்பனைக்கு உண்டு.
வயது - 07 மாதம்
தொடர்பு: **077 2411 504**

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

33 வருடகால வியாபாரத்தில் பண்ணை கடை வியாபாரத்திற்கு விசேட விலைக்கழிவு புரோயிலர், பேரன்ஸ், கல்பேட்ஸ், ஊர் கோழி, சேவல், விறாத்துக்குஞ்சுகள் இவை அனைத்தும் விசேட விலை கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்பு:-** நியூசிற்றி பாம்
நியூ சிற்றி கோழிக்கடை
இல 08, சின்னக்கடை மாக்கற்,
குருநகர், யாழ்ப்பாணம்.

(CS 26367)M-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 12 . 1934 — இறப்பு 22 . 09 . 2023

### இராமலிங்கம் அன்னலிங்கம்

நீர்வேலியை பிறப்பிடமாகவும் கோணாவளை வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் அன்னலிங்கம் அவர்கள் கடந்த (22.09.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.09.2023 வெள்ளிக்கிழமை மாலை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**மு.கிருபாலன் (மருமகன்)**

(CS 26363) A-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த (25.08.2023) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவன்

அமரர்
**பொன்னம்பலம் சுபாஷ் சந்திரன்**
(சங்கீதபூஷணம் அண்ணாமலை பல்கலைக்கழகம்)

அவர்களின் மறைவுத் துயரினை எம்மோடு பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10.30 மணிக்கு நல்லை துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ள 31ஆம் நினைவு தின நிகழ்வில் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 614 6414, 077 902 0308

**குடும்பத்தினர்.**

(CS 26364) A-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 07 . 1947 — இறப்பு 15 . 09 . 2023

### திரு.கேசகர் கனகசபை

யாழ்ப்பாணம், கொடிகாமம் கச்சாயைப் பிறப்பிடமாகவும் கொடிகாமம், கிளிநொச்சி பரந்தன் குமரபுரம், கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கேசகர் கனகசபை அவர்கள் 15.09.2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கேசகர் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேந்திரராணி (ராணி) அவர்களின் அன்புக் கணவரும், கவிதா, கஜந்தன், காலஞ்சென்ற கார்த்திகன் மற்றும் யதுர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நவநீதன், கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சரஸ்வதி, லக்சுமி மற்றும் கமலாதேவி, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிவயோகம் கோபாலப்பிள்ளை, ஞானசேகரம் மற்றும் நாகர்ராஜா, சாம்பசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் டர்மியா, வியாசிக், கஷ்னி, ருதினா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் Markham, ON L3R 5G1 இல் இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 (கனடா நேரப்படி) க்கு நடை பெற்று, தகனக்கிரியைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு :**
**கவிதா (மகள்)** +16 477 190 911
**கஜந்தன் (மகன்)** +1 4165742066
**கரன்** - 076 8584 105

(CS 263..) M-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 03 . 1962 — மறைவு 21 . 09 . 2023

### திரு.தம்பு மனோகரன்

புளியம்பொக்கணையை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டு பிரமந்த நாற்றை நிரந்தர வாழ்விடமாகவும் கொண்ட திரு. தம்பு மனோகரன் (மனோ) அவர்கள் கடந்த (21.09.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சின்னன் என்ற சுசிகலாதேவியின் பாசமுள்ள கணவரும், உயிதன், உயானன் (தருமபுரம் மத்திய கல்லூரி உயர்தர மாணவன்) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், காலஞ்சென்ற வர்களான தம்பு செல்லமுத்து தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் இளைய மரு மகனும், காலஞ்சென்ற குஞ்சுக்கிளி எனும் புவனேஸ்வரி, சந்திரா என்ற குகனேஸ்வரி, ஜேகேஸ் என்ற யெகதீஸ்வரி (மருத்துவ மாது, கிளிநொச்சி), ராசு என்ற மகேஸ்வரன் (இலண்டன்), கிருபாகரன் (கிருபா), நாகேஸ் என்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, சுப்புறு என்ற கந்தசாமி, தியாகராஜா, இராசேந்திரம், தவமணிதேவி, குஞ்சு என்ற ரஞ்சிதமலர், லீலா என்ற விமலேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக் காக கலவெட்டிதிடல் நெடுமோட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தொ.பே:077 8625 459**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 26366) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணிச்சுமை குறைய உதவினாராம் மகன்!

## அலி சப்ரி விளக்கம்

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் நிகழ்வுக்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள எனக்கு பணிச் சுமையைக் குறைப்பதற்காக மகன் உதவினார். அதன் காரணமாக என்னுடன் சில நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டார் - இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வெளிவிவகார அமைச்சர் கலந்துகொண்ட நிகழ்வில் அவரது மகனும் காணப்படுவது குறித்து சமூக ஊடகங்களில் விமர்சனங்கள் வெளியாகியுள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'எனது மகன் நான் வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையில் ஆராய்ச்சி உதவியாளராகவும் நகல் எழுத்தாளராகவும் உதவினார். அமெரிக்காவில் அவர் தற்போது கல்வி கற்று வருபவர் என்பதால் தனது நேரம், நிபுணத்துவத்தை ஒதுக்குவதற்கு முன்வந்தார். முக்கியமான சந்திப்புகள் நிகழ்வுகளில் எனக்கு அவரது ஆதரவு பெரும் உதவியாக அமைந்தது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கமோ வெளிவிவகார அமைச்சோ ஒரு சதம்கூட செலவிடவில்லை' என அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)


## பணிப்பெண் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் வீட்டு வேலைகள் செய்வதற்கு 35 - 45 வயதிற்கு இடைப்பட்ட நேர்மையான, வீட்டில் தங்கியிருந்து வேலைசெய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 788 8325

(CS 52232) N.1

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ (V) குடும்பத்தைச் சேர்ந்த, 1991 November, பூரட்டாதி முதலாம் பாதம், கிரகபாவம் 27 3/4, சூரியன், செவ்வாய் 8இல் உள்ள, நிரந்தரமாக, தனியார் ஸ்தாபனத்தில் Accountant, Consultant ஆகப் பணிபுரியும் B.Sc (Physical Science - Colombo University, CIMA (London) மணமகனுக்கு பணிபுரியும் பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு: 077 386 7183, 071 830 6613

(cs.52164) (N.1)

## வேலை வாய்ப்பு

மொத்த விற்பனை வியாபார நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் பதவிகளுக்கு பணியாளர்களை கோரி நிற்கின்றோம்

- கணக்கு உதவியாளர் (பெண்கள்)
  - மொத்த வியாபார கணக்குகளை பேணுதல்
  - கணினி அறிவு
  - முன் அனுபவம் விரும்பத்தக்கது
- சாரதி (ஆண்கள்)
  - சிங்கள் மொழியில் தேர்ச்சி
  - குறைந்தது 05 வருட அனுபவம்

NOTHERN UNIQUE ZONE (PVT) LTD
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 076 070 2935

(cs263651 (M.1)

## வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இயங்கும்மாபிள், Bathroom பொருட்கள், Paint மற்றும் Pvc Pipe விற்பனை செய்யும் வியாபார நிலையம் ஒன்றிற்கு

**பின்வரும் வேலையாட்கள் தேவை**

- சிட்டையாளர்
- விற்பனையாளர்
- பொருட்கள் ஏற்றி இறக்குவோர்

குறிப்பு:
முன் அனுபவம் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்
தங்குமிட வசதியும் செய்து தரப்படும்
ஆர்வமுள்ளளோர் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 076 135 9300
Whatsapp 076 201 7714

நிர்வாகம்

(cs.26337) (N.1)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி மருத்துவபீட பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

077 209 8826

## காணி விற்பனைக்கு

யாழ்.காங்கேசன்துறை K.K.S. பருத்தித்துறை கரையோர வீதியில் இருந்து 500 m தூரத்தில் 8 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

075 521 3533

## வேலையாட்கள் தேவை

யாழ். மனோகரா திரையரங்கிற்கு அருகிலுள்ள புத்தக. போட்டோகொப்பி கடைக்கு அனுபவமுள்ள / அனுபவமற்ற பெண் ஊழியர்கள் தேவை.

076 832 3682

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 781 3417

## வீடு விற்பனைக்கு

மாவிட்டபுரதில் 1 பரப்பும் 04.84 குழிகளினுடைய வீடு விற்பனைக்கு

077 209 8826

## கடற்கரை காணிகள் விற்பனைக்குண்டு

கொழும்புத்துறை. நயினாதீவு பகுதிகளில் கடற்கரையோர காணிகளும் கல்வியங்காடு. கச்சேரியடி. கோப்பாய். வளலாய் பகுதிகளில் வீடுகட்டுவதற்கு உகந்த காணிகளும் விற்பனைக்குண்டு.

076 050 3863, 077 249 7160

## வீட்டுப்பணிப் பெண் தேவை

தங்குமிட வசதி வழங்கப்படும்.
சம்பளம்: 1200 (ஒரு நாளிற்கு)

077 868 9526

## வீடு விற்பனைக்கு

மயிலிட்டியில் வீடு விற்பனைக்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து 1 KM தூரம்.

077 209 8826

## காணி விற்பனைக்கு உண்டு


யாழ்ப்பாணம் நாவற்குழியில் **78 பரப்பு (நிலப்பரப்பு)** விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389


## மரண அறிவித்தல்

தோற்றம் 03 01 1954



மறைவு 08 09 2023

### திரு.இராமலிங்கம் விஜயகுமாரன்

(முன்னாள் பொறியியலாளர்,
இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை, புத்தளம்)

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கை பிறப்பிடமாகவும், ஐக்கிய இராச்சியம் கொவென்றியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராமலிங்கம் விஜயகுமாரன் அவர்கள் கடந்த (08.09.2023) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் சிவமணி தம்பதியினரின் பாசமிகு மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும், நகுலராஜேஸ்வரி (UK) அவர்களின் அன்புக் கணவரும், சயந்(UK), அஜந்(UK), பிரிஜந்(UK), சாயிவீனா (UK) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சிவகங்கா(UK), ரசிமாலா(UK), றோஜினி(UK), றயோசன்(UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், உதயகுமாரன், ரதிகா, விமலகுமாரி (Canada), கணேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், விஷ்ணுகுமாரி, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் ஜெயக்குமார் (Canada) மற்றும் காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரி மற்றும் புவனராஜேஸ்வரி (UK), கேதீஸ்வரராஜா, குருபரராஜா, பாலராஜேஸ்வரி (Germany), மங்களராஜேஸ்வரி, சக்தீஸ்வரராஜா(UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றோகிற், திவானா, அஸ்வின், அய்ஷா, அபர்ணா, லியானா, லக்சா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 24-09-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 (ஐ.இ. நேரம்) மணியளவில் Coventry Muslim Resource Centre, Red Lane, Coventry, CV6 5EE இல் ஆரம்பமாகி, அதனைத் தொடர்ந்து பூதவுடல் மு.ப 10.30 மணிக்கு Heart of England Crematorium, Eastboro Way, Attleborough Fields Industrial Estate, Nuneaton, CV11 6WZ இல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

54, கருவேப்புலம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
சகோதரர், சகோதரிகள்.

(CS 52224) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

நல்லூரின் வீதியில் நடந்தது யாகம்
நாலுநாள் ஆனதும் சுருண்டது தேகம்
தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை
திலீபனைப் பாடிட வார்த்தைகள் இல்லை

# சஞ்சீவி

மலை 33 | வள்ளுவர் ஆண்டு: 2053 | புரட்டாதி 7 ஞாயிற்றுக்கிழமை (24.09.2023) | சிகரம்: 166

குரலெடுத்ததோர் குயில் படுத்தது
குமுறி நின்றதோர் புயல்படுத்தது
தரமறுத்திடும் உரிமை பெற்றிட
தன்வயிற்றிலே போர் தொடுத்தது

உரம் எழுந்தனி தடை உடைக்குமா?
உயிர் விரயமும் இது நடக்குமா?
வரமறுப்பவர் வருகை கூடுமா?
வலைவிரித்தவர் படைகள் ஓடுமா?

அரிசி கொண்டொரு படகு வந்தது
அதைத் தொடர்ந்து செஞ்சிலுவை வந்தது
வரிசை வரிசையாய் கவசவாகனம்
வந்து வந்தெமை உரிசை பார்த்தது


படகு வந்து வாய்க்கரிசி போட்டது

நெஞ்சில் ஆடிடும் கனவு மாளுமா?
நினைவு இழந்திடும் பிஞ்சு வீழுமா?
அஞ்சி வாழ்ந்தவர் அரசில் ஏறவா?
அனலில் ஆடிய வேங்கை சாகவா?
நஞ்சு தின்றிட அஞ்சிடாதவன்
நல்லை வீதியில் பாடை ஏறவா?

இங்கு ஓர் மலர் வாடுகின்றதே
இதயநாடி ஒடுங்குகின்றதே
தங்கமேனியைச் சாவு தின்னுதே
தணலில் ஆடிய மேனி சோருதே

பொங்கி நின்றவன் பேச்சடங்குதே
பொழுது காயுதே பொழுது காயுதே
வந்து பாரடா வந்து பாரடா
வாட முன்னொரு சேதி கூறடா

- புதுவை இரத்தினதுரை



புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திலீபனுக்குள் ஒரு பார்த்தீபம்

எவராலும் நினைத்தே பார்க்க முடியாத, ஒரு துளி நீர் கூட அருந்தாது தம்மை வருத்தி, அகிம்சைப் போரை முன்னெடுத்து ஆகுதியான திலீபனை எல்லோருக்கும் ஒரு போராளியாகவே தெரியும். ஆனால் திலீபனுடன் நெருங்கிப் பழகிய மூத்த ஊடகவியலாளர் ஒருவர், அதே திலீபனுக்குள் ஒளிந்திருந்த பார்த்தீபன் என்ற சிறுவனை வெளிக்கொணர்கின்றார்.

○ அனஜித்

அது அறிமுகமற்ற ஒருவருடனான புதியதும், முதலாவதுமான சந்திப்பாக இருக்கவில்லை என்பது எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. வீணான கதைகளோ,விமர்சனங்களோ,எதுவுமன்றி ஒரு அதீத தேடல் உணர்வுடன் பல விடயங்களையும் அறிந்துகொள்ள விரையும் ஆர்வம் அவனிடம் இருந்தது.

பல விடயங்கள் பற்றியும் பேசினான்.

"அண்ணா உங்களைச் சந்தித்தது சந்தோஷம்... அடிக்கடி வந்து தொந்தரவு செய்வேன்" என்று சிரித்தபடியே கூறியவன். "தேவையில்லாமல் வந்து கரைச்சல் தரமாட்டேன்" என்றான். மேசையில் கிடந்த புத்தகக் குவியலைப் பார்த்துவிட்டு "புத்தகங்களைப் பார்க்கலாமா?"என்றான். நான் தலையாட்டினேன். அவன் புத்தங்களுடன் உறவாட ஆரம்பித்து விட்டான்.

புறப்படும் போது கேட்டான் "அண்ணா உங்களிடம் ராணி கொமிக்ஸ் இல்லையா?"என்று.

அந்தக் கணத்தில் தீலிபனுள் மறைந்திருந்த "பார்த்தீபன்"என்ற சிறுவனை நான் இனம் கண்டு கொண்டேன்.

★★★★

அதன்பிறகு எத்தனை சந்திப்புக்கள் ,எவ்வளவு உடையாடல்கள், எத்தனை பிரச்சினைகள்.

திலீபனுக்கும் எனக்குமான உணர்வுபூர்வமான கருத்துப் பரிமாற்றங்கள் மரியாதையுடன் கூடிய முதல் அறிமுகம், உரிமையுடன் கூடிய ஒரு உறவாக இறுதிவரை தொடர்ந்தது. பல தடவைகள் திலீபனாகவும் சில தடவைகள் பார்த்தீபனாகவும் அவன் எனக்குத் தன்னை அடையாளப்படுத்தியே வந்துள்ளான்.

'ராணி' கொமிக்ஸ் படிப்பதில் பெருவிருப்புடன் இருந்தவன் பார்த்தீபன். ஆனால் திலீபன் அதற்கு நேர்மாறான இன்னொரு வடிவமாக இருந்தான். போராட்டம் அரசியல்,விடுதலை,சுதந்திரம் என்ற விடயங்கள் குறித்த அனைத்து நூல்களையும் துழாவுவான். அதற்குள் ஊடுருவுவான். அவை தொடர்பான அவன் கேட்கும் கேள்விகள் அவனது சுய தேடலை இனங்காட்டின. இது அவனுக்கும் எனக்குமான ஒரு உரையாடல்.. "திலீபன்... நீ ராணி கொமிக்ஸையும் விழுந்து விழுந்து படிக்கிறாய்,சேகுவேராவையும் படிக்கிறாய்.. இது பெரிய முரணாக இருக்கவில்லையா?" "ஏன் அண்ணா.... ராணி கொமிக்ஸ் சிறுவர் புத்தகம் என்று பார்க்கிறீர்களா?அதைப் படிக்கேக்கை மனம் உற்சாகமாகிறது. சோம்பல் பறந்து போகிறது. ஏதாவது புத்திசாலித்தனமாகச் சாதிக்கத் தோன்றுகிறது. மற்றவை ஆழமாக சிந்திக்க வைக்கின்றன."

★★★★

திலீபத் தீபம் சுடர்விடத் தொடங்கி மூன்று தசாப்தங்களுக்கு மேலாகிவிட்டது. அது அணையாத, எவராலும் என்றைக்குமே அணைக்க முடியாத, எவராலும் அருகே அணுகவும் முடியாத தமிழினத்தின் ஆத்ம தீபம் என்பதை அறிவிலிகளும் உணர்விலிகளும் உணரார்.

**அது தன்னைத் தானே சுயம்புவாக, எரியூட்டி ஒளிரச் செய்துகொண்ட தீபம். அது தமிழினத்தின் அடிமை இருள் விலகும்வரை, சுதந்திர ஒளி பரவும் வரை ஒளிர்ந்துகொண்டே இருக்கும்.** அதனை அதிகார வெறித்தனத்தால் மறைக்க முற்படுவது சூரியஒளியை கைகளால் மறைக்க நினைக்கும் செயற்பாடாகவே அமையும்.

'திலீபன்', சகாப்தத்தில் அதிகார வெறிகொண்டு பதவிக் கதிரைகளில் அமர்ந்தபடி, ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்து கொண்டிருந்த உள்நாட்டவரும் சரி,அயலகத்தவர்களும் சரி முகவரி இழந்தவர்களாக மறக்கப்பட்டு தேடுவாரற்றும் போய் விட்ட நிலையில் திலீப தீபம் மட்டும் திக்கெட்டும் ஒளிர்கின்றதே...!

சட்டத்தாலும், அதிகார ஆணைகளாலும், திலீபன் நினைவுகளுடன் தீபமேற்றி அஞ்சலிப்போரை மட்டுமே மிரட்டவும் தடுக்கவும் முடியலாம். ஆனால் தன்னைத்தானே விடுதலைக்கான வழிகாட்டும் தீபமாக ஒளிவிட்டுக்கொண்டு , அணையா விளக்காக சுடரும் 'பார்த்தீபம்'வல்லாதிக்க மேலாதிக்க சக்திகளுக்கு ஒரு போதுமே கட்டுப்படாது.

ஒவ்வொரு மனிதநேயனும், சுதந்திரப்பிரியரும் ,விடுதலைப் பயணியும் தமிழ் உணர்வாளனும் கண்களை மூடினால் அவனுள்ளே திலீபச் சுடர் ஒளிர்ந்து கொண்டே இருக்கும்.

ஒரு சில அதிகார சக்திகளால் ஒரு தனிமனிதனின் ஆன்ம பலத்தை அடக்கி விடமுடியவே முடியாது. அது 'பாரொடு விண்ணாக'பரந்த சோதிப்பிழம்பைப் போன்றது.

அது தமிழினத்துக்கு காலம் கையளித்த அணையா ஒளி விளக்கு.....

அந்த மகத்தான சக்தியை - திலீப தீபத்தை நினைக்கும் போதெல்லாம் அவன் குறித்த 'பார்த்தீப' பதிவுகள் மனதில் எழவே செய்கின்றன.

அந்த மகா ஆத்மாவுள் மறைந்திருந்த. மனித ஆத்மா பதிந்து விட்டுச் சென்ற எவ்வளவோ செய்திகள் மேலெழும்போது, திலீபனை நினைவில் வைத்துவிட்டு பார்த்தீபனை மறந்துவிட்டீர்களா என்று அவன் கேட்பது போலிருக்கிறது.

அவனோடு பார்த்து ,பேசி ,பணியாற்றி ,பழகிய நாள்கள் வெறுமனே மூன்றாண்டு காலப்பகுதிக்குள்ளே அடங்கும். அந்தக் காலப்பகுதியானது எவ்வளவு வேகமாகவும், இலக்கு நோக்கியும் , அதே சமயம் அர்த்தமுள்ளதாகவும், மறக்கவே முடியாததாகவும் அமைந்திருந்தது என்பதை இப்போது நினைக்கப் பிரமிப்பாக இருக்கிறது.

★★★★

*1985 களின் நடுப்பகுதி .*

ஒருநாள் எனக்குத் தெரிந்த ஒரு இளைஞர் , ஒழுங்காகச் சீவி விடப்படாத அடர்ந்த தலைமுடி, அகன்ற 'பிரேமுடன்'கண்ணாடி அணிந்த, முகம், மெலிந்து உயர்ந்த தோற்றம், தொளதொளப்பாக அரைக்கை வரையும் மடித்திருந்த சட்டை, எதனையோ தீவிரமாகத் தேடும் கண்கள் போன்ற அம்சங்களுடன் தோன்றிய இன்னொரு இளைஞனை அழைந்து வந்து "அண்ணா இவர்தான் நான் சொன்ன திலீபன்"என எனக்கு அறிமுகப்படுத்திவிட்டு, " அண்ணாவுடன் கதைச்சுக்கொண்டிருங்கள் அரை மணித்தியாலயத்தில் வந்து விடுகிறேன்"என்று விட்டுவிட்டுப் போய்விட்டார்.

எனக்கு அருகில் வந்த அந்த இளைஞர் "ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்...நாங்கள் குழப்பிவிட்டோமா தெரியவில்லை. மன்னிக்கவும்"என்றார்.

".... இல்லை .... நீங்கள் செல்லுங்கோ தம்பி"என்றேன்.

அவர் உடனே.... "நான் திலீபன்.."என்றே தன்னை அறிமுகப்படுத்திவிட்டு, என் மூலமான தங்கள் தேவைகளையும் விபரித்தான். நான் மௌனமாக அவன் செல்வதைக் கேட்டுவிட்டு " திலீபன் என்பது தான் உங்கள் சொந்தப் பெயரா?"என்றேன்.

"இல்லை அண்ணா, எனது சொந்தப் பெயர் பார்த்தீபன்..ஏன் திலீபன் நல்ல பெயரில்லையா?" என்றான் சிரித்தபடி. "இல்லை எனக்கு பிடித்த பெயர்..குமுதத்தில் வெளி வந்த ஜாவர் சீத்தா ராமனின் தொடர்கதையான 'உடல் பொருள் ஆனந்தி ' என்ற கதையின் நாயகன் பெயர் திலீபன். அதைவிடவும் நம் நாட்டுக் கவிஞர் சில்லையூர் செல்வராசன் எழுத்தாளர்-மல்லிகை டொம்னிக் ஜீவா ஆகியோரின் பிள்ளைகளுக்கும் பெயர் திலீபன் தான்.."என்றேன்.

அவன் சிரித்துக்கொண்டே "எல்லாத்தையும் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களே...!" என்றவன் தொடர்ந்து பல விடயங்களைப் பற்றி பேசினான். தர்க்கித்தான். விளக்கம் கேட்டான். அவை குறித்த தனது எண்ணங்களையும் பரிமாறினான்.

"கொமிக்ஸ் உடலைப் பலப்படுத்துகிறது. பெரிய புத்தகங்கள் அறிவை பலப்படுத்துகின்றன என்று தான் நான் நினைக்கிறேன்..." என்று தன் விளக்கத்தையும் சொன்னான் திலீபன்.

எப்படி ஒருவனால் பார்த்தீபனாகவும் அதே சமயம் திலீபனாகவும் இயங்க முடிகிறது என்பதை அவன் சுலபமாக இனங்காட்டிய சம்பவம் இது.

★★★

மருத்துவமனையில் ஒரு சிறு சத்திர சிகிச்சைக் குள்ளாகியிருந்த சமயம் அவனைப் பார்க்கச் சென்றிருந்தேன். கையில் பழவகைகள் அடங்கிய ஒரு பை. கட்டிலில் படுத்திருந்தான் . என்னைக் கண்டதும் வழமையான அதே சிரிப்புடன் வரவேற்றான் ... பையை அருகே வைத்தேன்.

"என்னண்ணா கொண்டு வந்திருக்கிறாய்?"

"கொஞ்சம் பழங்கள் இருக்கு"

"சீ!விசரே எனக்கேன் பழங்கள்? கொஞ்சம் கண்டொஸ்... கொண்டுவந்திருக்கலாமே...."

நான் அதிர்ந்து போனேன்..

நான் திலீபனைத் தான் பார்க்கச் சென்றேன். ஆனால் அங்கு என்னோடு பேசியது..ராணி கொமிக்ஸ் வாசகனான சிறுவன் பார்த்தீபன்தான். புரிந்து கொண்டேன். உடனே வெளியே போய், "கண்டொஸ்'களுடன் திரும்பினேன்.

★★★★

ஒரு சமயம் என் வீட்டுக்கு, ஏதையோ பற்றிக் கதைக்க வந்திருந்தான் . வாசலில் எனது பிள்ளைகள் இருவரும் விளையாடிக்கொண்டிருந்தனர். வந்திறங்கியவன் வாசலில் இருந்த அவர்களுடன் தானும் ஒருவனாக அமர்ந்து விளையாட ஆரம்பித்து விட்டான்.

எனது மகன் கீழே கிடந்த விளையாட்டுத் துப்பாக்கியை எடுத்து திலீபனிடம் கொடுத்து அங்கே கிடந்த 'நாய் பொம்மை ஒன்றைக்காட்டி"மாமா.. அதைச் சுடு"என்றான்.

உடனே திலீபன் "நாய்க்குட்டி பாவம் .அதைச் சுடக்கூடாது.."என்ற படி துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு நாய்க்குட்டிப் பொம்மையை தடவிக்காட்டினான்.

**அந்தச் சமயத்தில் தீலிபனை அங்கு நான் காணவில்லை பார்த்தீபனையே என்னால் தரிசிக்க முடிந்தது.** ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபனின் கனவு காத்திருக்கிறது



○ ராஜன்



அவரை முதன் முதலில் சந்தித்து உரையாடியது சுபாஸ் வீட்டில் தான்.

அன்று திலீபன் என்னை அழைத்து சென்று சுபாஸ் வீட்டு தலைவாசலில் இருந்த சாய்ம னைக் கதிரையில் இருந்து கொண்டு, செய்யப் படவேண்டிய வேலைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லித் தந்ததும், பின்னர், நண்பர்கள் சுபாஸ், நவம், சுகு, விக்கினா, நகு லேஸ், அஜித், குட்டி சிறி என்று எங்கள் நண் பர்கள் வட்டம் பெரிதாகி திலீபனுடன் வேலை செய்யத் தொடங்கியதுமாக நாட்கள் நகர்ந்தன.

திலீபன் எப்போ எங்களை இந்தியா பயிற்சிக்கு அனுப்புவார் என்ற எண்ணத்துடன் திலீபன் வரவை எதிர்பார்த்து மேஜர் சுபாஸ் வீட்டு தலை வாசலில் எல்லோரும் காத்திருப்போம். தலைமறை வாக அரசியல் பணி செய்த காலம் அது. திலீபன் நினைத்த நேரம் தான் சந்திப்பு நிகழும்.

அமைப்பில் இணையும் தவிப்பில் இருந்த நண்பர்க ளாக எங்களுக்குள் சில விடயங்களைக் கதைப் போம். அவற்றில் ஒன்று இந்தியா சென்று பயிற்சி பெற்று, செல்லக்கிளி அம்மான் வீரமரணத்தின் பின் ஒட்டிய போஸ்டரில் நின்றது போல் எஸ்.எம்.ஜி துப்பாக்கியுடன் நின்று நாங்களும் படம் எடுக்க வேண்டும், மற்றது மானிப்பாயில் ஜூலை மாதத் தில் திருப்பதி புத்தக சாலையின் வாசலில் இராணு வத்தால் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கும், எங்கள் நண்பர்களுக்காகவும் அதே இராணுவத்தை திருப்பி அடிக்க வேணும். இவையே அப்போதைய எங்களின் உள்ளக்கிடக்கைகளாக இருந்தன.

திலீபன் "இந்தியாவுக்கு இந்தக் கிழமை அனுப்புகி றேன்" என்று கூறி பல மாதங்கள் கடந்து விட்டன. ஒரு நாள் அவர் வரவை எதிர்பார்த்து சுபாஸ் வீட் டில் எல்லோரும் காத்திருந்தோம் . வழமை போல் அன்றும் வந்து சாய்மனைக் கதிரையில் அமர்ந்த திலீபனை நோக்கி, "எப்போ என்னை அனுப்ப போகிறியள்?" என்று அஜித் கேட்டான். கேட்ட கையோடு மேசையில் இருந்த கத்திரிக்கோலை எடுத்துக் கொண்டு சாய்மனை கதிரையில் படுத்தி ருந்த திலீபனை பார்த்து "இந்தமுறை பேய்க்காட்டி னால் குத்துவன்" என்று கோபமாக கிட்ட வந்தான். நாங்கள் எல்லோரும் பாய்ந்து அவனைப் பிடித்து கத்தரிக்கோலைப் பறித்துக் கொண்டோம். அடுத்து என்ன நடக்குமோ என்று தெரியாத மயான அமைதி தலைவாசலில் குடி கொண் டது.

அமைதியாக அஜித்தை அழைத்து புத்திமதி கூறிவிட்டு "அடுத்தமுறை கட்டாயம் அனுப்பு வேன். யோசிக்க வேண்டாம். உங்கள் உணர்வு எனக்குப் புரிகிறது" என்று ஆறுதல் கூறி விடை பெற்றார் திலீபன் . அதன் பின் நாங்கள் அஜித்தை "நீ மொக்கு வேலை பார்த்து விட் டாய் "என்று வாய்க்கு வந்தபடி ஏசினோம். ஆனால் அடுத்த முறை தலைவாசல் சந்திப்பில் அஜித்தை காணவில்லை. திலீபன் எங்கள் குழு வில் அவனை மாத்திரம் இந்தியா அனுப்பி விட்டார்.

எங்கள் குழுவுடன் கருத்து முரண்பட்டுக் கொண்ட நண்பன் விக்கினா ரெலி என்ற இயக் கத்தில் இணைந்து விட்டான். சுகு அதிரடிப் படை என்று ஒரு இயக்கத்தை ஆரம்பித்து விட் டான். குட்டிச்சிறி, நான் ,சுபாஸ் ஆகியோரே திலீபன் பின்னால் நம்பிக்கையோடு திரிந் தோம். நவம் ரெலோ இயக்கத்துக்குச் சென்று விட்டார். எங்கள் நண்பர்கள் வட்டம் சுருங்கத் தொடங்கியது நகுலேஸ் வெளிநாடு சென்று விட்டான். அந்த நாட்களில் நவாலியில் களை யோடை அம்மன் கோவிலில் இருந்த ஐயாவு டன் கதைத்து விட்டு சாப்பாடும் வேண்டி சாப்பிடுவதும் வழக்கம். இப்படி ஒரு நாள் அங்கி ருந்து சைக்கிளில் வெளிக் கிட்டு ,சிறு கறுப்பு சூட் கேஸ் ஒன்றுடன் வட் டுக்கோட்டை வீதியில் ஏறி நவாலி சேர்ச்சடி என்ற இடத்துக்கு நான், சுபாஸ், நவம், மற்றும் திலீபனும் அங்குள்ள நண்பர்களான செல் லக்கிளி, மற்றும் ரவியை சந்திப்பதற் காகச் சென்றோம். சேர்ச் வாசலில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் வைத்து அவர்களுடன் திலீபன் கதைத்துக் கொண்டு நின்றார். எதிர்பாராமல் அந்த இடத்துக்குச் சமீபமாக வந்தது ஒரு பொலிஸ் ஜீப் . ஜீப்பைத் தூரத்தில் கண்டதுமே மெதுவாகக் கலைந்து செல்லுமாறு எங்களுக்குக் கூறிவிட்டு தான் பஸ்ஸுக்குக் காத்திருக்கும் பயணிமாதிரி நின்று கொண்டார் திலீபன் . நானும் சுபாசும் எதிரில் உள்ள ஒழுங்கை ஒன்றில் ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தோம்.

ஜீப் வண்டி சொல்லி வைத்தமாதிரி பஸ் தரிப் பிடத்தின் அருகில் வந்து நின்றது. பொலி ஸார் இறங்கி வந்து திலீபனுடன் கதைத்துக் கொண்டு நின்றார்கள். திடீர் என்று தீலிபன் தனது கையிலிருந்த சூட்கேஸால் சுழற்றி அடிப்பது தெரிந்தது. தொடர்ந்து துப்பாக்கிச் சத்தம் கேட்டது.

நாங்கள் இருவரும் ஒழுங்கையால் ஓடி விட் டோம். அன்று கண்முன்னால் அந்த அமைதி யான திலீபனின் துணிவையும், தந்திரத்தையும் கண்டோம். பொறுமை, செயல்திறன், வீரம், சமயோசித புத்தி என பல திறன்களை ஒருங்கே கொண்ட திலீபன், தன் இனத்தின் உறுதியை உணர்த்த உண்ணாநோன்பி ருந்து,உயிர் துறந்தான்.

திலீபனின் வழங்கிய பயிற்சி மற்றும் வழிகாட் டலுடன் வளர்ந்த பலர், 36 ஆண்டுகளின் பின்னரும் உலகெங்கும் சிதறிக் கிடக்க திலீப னின் கனவும், சொந்த மண்ணும் இன்னமும் அந்த மக்கள் புரட்சிக்காகக் காத்திருக்கிறது!

■

## வயிற்றில் தீ வளர்த்த வலியனே...



விடுதலைக்காய் நாம் கொடுத்த விலை அதிகம்
தியாகத்தின் உயரத்தில் நீ இமயம்
அஞ்சாமல் நல்லூரில் பசித்தீ வளர்த்தாய் அன்று நீ
எங்கள் விடுதலைக்காய் வீசி நின்ற புயல் காற்று

வைகறை எழுந்தாய்
குளித்தாய்.
குறிப்பெழுதினாய்

சாவுக்கு தானா?
அண்ணா அன்று நீ
சண்டையிட்டாய்

நல்லூரின் வெள்ளை மணல்வீதியிலே
கூட்டி வந்தோர் உன்னை கொலுவிருத்தினர்

புல்லரித்துப்போனதெம்பூமி

நீ படுத்தாய்
எழுந்தாய்
பக்கத்திருந்தோரைபார்த்து -ஏதோ
சொல்லிச்சரிந்தாய்.

வயிற்றில் தீ வளர்த்த வலியனே...
அன்று கயிற்றுக்கொடிபோல
கருகிக்கிடந்தாயே
மறப்போமா அந்த நாட்களை அண்ணா...
ஆ..வென்று வந்துன்னை சாவு
விழுங்கியபோது இந்தபாவிகளும்பார்த்துக்கொண்டிருந்தன

உந்தன் "நாவு" அன்னத்தில் ஒட்டிய போது
வெள்ளை மணல் வீதி விம்மியது
சூழ்ந்திருந்த சுற்றம் தேம்பியது

இமயத்தின் மாயவலை நீ
கிழித்தாய்
எங்கள் இதயங்கள் மீது தடம் நீ பதித்தாய்
இளஞ்சந்ததிக்கு உணர்வேற்றி
அன்று நீ சரிந்தாய்
தமிழ் மண்ணின் இருக்கும் வரை நீ உயிர் வாழ்வாய்..

யோ.சாதுரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> திருமலைச் சம்பவம் முன்னணியின் வாக்கு வங்கியைப் பலப்படுத்தும். அதேசமயம் அது திருகோணமலையில் இளம் தலைமுறையினர் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தக் கூடியது. கடந்த 14 ஆண்டுகளாக ஒரு தலைமுறை அரசியல் நீக்கம் செய்யப்பட்டு வருகிறது. அதில் ஒரு பகுதி ஏன் சிங்கள பௌத்தத்தை எதிர்க்க வேண்டும் ? என்று கேட்கத் தொடங்கிவிட்டது.

# முன்னணி குளவிக்கூட்டுக்கு கல்லெறிகின்றதா?

நிலாந்தன்

திருகோணமலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வாகன ஊர்தி தாக்கப்பட்டிருக்கிறது. திலீபனின் படத்தை ஏந்திய அந்த ஊர்தி கடந்த ஆண்டும் அந்த வழியால் சென்றிருக்கிறது. இது இரண்டாவது தடவை. அது தாக்கப்பட்ட இடம் கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் கீழ் அபகரிக்கப்பட்ட தமிழ் நிலம். கடந்த ஆண்டு அந்த ஊர்தி குறிவைக்கப்படவில்லை. இந்தமுறை தான் அது குறிவைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊர்தியைக் குறிவைத்து அசம்பாவிதங்கள் நடக்கலாம் என்பது ஏற்கனவே மட்டக்களப்பில் உணர்த்தப்பட்டிருக்கிறது. ஆனாலும் அப்படி ஒரு தாக்குதலை முன்னணி எதிர்பார்க்கவில்லை என்பது காணொலிகளைப் பார்க்கும் பொழுது தெரிகிறது. தம்மைத் தற்காத்துக் கொள்ளத் தேவையான ஆளணிகளோடு அவர்கள் வரவில்லை என்பதும் தெரிகிறது.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எனப்படுகிறவர் தனியன் அல்ல. அவர் ஒரு சமூகம். அவருக்கு வாக்களித்த மக்களின் பிரதிநிதி. ஆனால் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிகச் சிலரோடு நிற்கிறார். அதுவும் தாக்கியவர்களுக்குத் துணிச்சலைக் கொடுத்திருக்கும். பொலிஸார் தாக்குதலைத் தடுக்கவேண்டும் என்ற வேகத்தோடு செயற்படவில்லை. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மத்தியில் ஊடகவியலாளர்களும் இருந்திருக்கிறார்கள். அந்த ஊடகவியலாளர்களில் சிலர் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினரைப் பாதுகாக்க முற்பட்டிருக்கிறார்கள். தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மத்தியில் பெண்கள் காணப்படுகிறார்கள். அதை ஒரு சமூகத்தின் தாக்குதலாகக் காட்ட வேண்டும் என்று நன்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

முன்னணி கடந்த சில மாதங்களாக தமிழ் அரசியலை நொதிக்கச் செய்கின்றது. தமிழ் எதிர்ப்பு அரசியலின் ஈட்டி முனையாக அந்தக்கட்சி மேலெழுந்து வருகிறது. குறிப்பாக நிலப்பறிப்பு, விகாரைகளைக் கட்டுவது போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக அந்தக்கட்சி தீவிரமாக எதிர்ப்பைக் காட்டி வருகிறது. எனவே அந்தக்கட்சிக்கு அதன் வரையறைகளை உணர்த்தும் விதத்தில் அச்சுறுத்தலைக் கொடுப்பதே அந்தத்தாக்குதலின் நோக்கமாக இருக்கலாம். ஏற்கனவே கஜேந்திரகுமாரைக் கைது செய்து பின் வெளியில் விட்டமையும் அவருடைய கொழும்பு வீட்டை முற்றுகையிட முற்பட்டமையும் அந்த நோக்கத்தோடுதான். கொழும்பு வீட்டை முற்றுகையிட முற்பட்டமை, கஜேந்திரகுமாரை விடவும் அவருடைய தாயாருக்கு அச்சுறுத்தலானது. ஏற்கனவே கணவனைப் பறிகொடுத்தவர். அவரைப் பொறுத்தவரை அதுதான் அவருடைய வசிப்பிடம். அங்கே அவருக்கு நெருக்கடியைக் கொடுப்பதன் மூலம் அவருடைய மகனுக்கு நெருக்கடியைக் கொடுக்கலாம். எனவே திருகோணமலையில் நடந்த தாக்குதலானது 2009க்குப் பின் தமிழ் எதிர்ப்பு அரசியலுக்கு இருக்கக்கூடிய வரையறைகளை உணர்த்தும் நோக்கிலானது என்று சொல்லலாம்.

ஒருபுறம் அது முன்னணியை அச்சுறுத்தும் நோக்கிலானது. இன்னொருபுறம் அதன்மூலம் முன்னணியை ஓரளவுக்கு பலப்படுத்தும் உள்நோக்கமும் இருக்கலாம். தமிழ்த் தேசியப் பரப்பில் வெளிப்படையாக இந்திய எதிர்ப்பை முன்னெடுக்கும் கட்சி அது. அந்தக்கட்சியை குறிப்பிடத்தக்க அளவுக்கு பலப்படுத்தினால், தமிழ்மக்கள் மத்தியிலேயே இந்திய எதிர்ப்பை நிறுவனமயப்படுத்தலாம். அதன்மூலம் அரசாங்கத்தின் வேலை இலகுவாகிவிடும் என்ற உள்நோக்கமும் அந்தத்தாக்குதலுக்கு இருக்கக்கூடும்.

அந்த ஊர்தி அந்த வழியால் போனதால் சிங்கள மக்கள் ஆத்திரமூட்டப்பட்டார்கள் என்று ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. பொதுவாக எல்லா எதிர்ப்பு அரசியற் களங்களிலும் இந்த வாதம் முன்வைக்கப்படுவதுண்டு. ஆயுதப்போராட்டத்தின் தொடக்க காலங்களில் கொரில்லாத் தாக்குதல்கள் நடந்த போதும் இந்த வாதம் முன்வைக்கப்பட்டது. 'குளவிக் கூட்டுக்குக் கல்லெறிகிறார்கள். அதனால் குளவிகள் கலைந்து அப்பகுதியில் இருக்கும் சாதாரண மக்களைக் கொட்டும்' என்றும் விளக்கம் தரப்பட்டது. எதிர்ப்பு அரசியலின் பண்பே அத்தகையது தான். எதிர்ப்புக் கூர்மையடையும் பொழுது அதற்கு எதிரான ஒடுக்குமுறையும் கூர்மை அடையும். ஒடுக்கும் தரப்பு அதன் மூலம் தன்னை அம்பலப்படுத்தும். அதனால் ஒடுக்கப்படும் தரப்பு மேலும் அரசியல் மயப்படுத்தப்படும். ஒடுக்குமுறைக்கு எதிராக அணி திரளும். உலகமெங்கிலும் எதிர்ப்பு அரசியல் அப்படித் தான் வளர்ந்திருக்கிறது. திருமலைச் சம்பவம் முன்னணியின் வாக்கு வங்கியைப் பலப்படுத்தும். அதேசமயம் அது திருகோணமலையில் இளம் தலைமுறையினர் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தக் கூடியது. கடந்த 14 ஆண்டுகளாக ஒரு தலைமுறை அரசியல் நீக்கம் செய்யப்பட்டு வருகிறது. அதில் ஒரு பகுதி ஏன் சிங்கள - பௌத்தத்தை எதிர்க்க வேண்டும் ? என்று கேட்கத் தொடங்கிவிட்டது. இன்னொரு பகுதி 'ஏன் பொது எதிரி என்று அழைக்கவேண்டும்?' என்றும் கேட்க தொடங்கிவிட்டது.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் திருமலைச் சம்பவமானது ஒடுக்கு முறைக்கு எதிரான விழிப்பை அதிகப் படுத்தக் கூடியது. சம்பவத்தின் பின் அங்குள்ள இளையோரின் சமூகவலைத்தளச் செயற்பாடுகளில் அதைக் காணக் கூடியதாக இருப்பதாக ஒரு சமூகச் செயற்பாட்டாளர் சொன்னார். சம்பவத்துக்கு முன் திலீபன் யார் என்று கேட்டால் தெரியாது என்று சொல்லக்கூடிய பலரும் இப்பொழுது திலீபனைத் தேடி வாசிக்கிறார்கள் என்றுமவர் சொன்னார். அதுமட்டுமல்ல. சம்பவத்தின் பின் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரும்பாலான கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் முன்னணியுடன் தமது சகோதரத்துவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக முன்னணியில் இருந்து பிரிந்து சென்ற மணிவண்ணன் உட்பட தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் முன்னணிக்கு ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத அரசியல்வாதிகளும் சம்பவத்தைக் கண்டித்திருக்கிறார்கள். நாட்டுக்கு வெளியே தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் உட்படப் பலரும் கண்டித்திருக்கிறார்கள்.

ஒடுக்குமுறை என்று வரும்பொழுது தமிழ்மக்கள் இனமாகத் திரள்வார்கள் என்பதனை இந்தச்சம்பவத்தின் பின்னரான நிலைமைகள் காட்டுகின்றன. இங்கேதான் முன்னணி கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு விடயமும் இருக்கின்றது. காலத்துக்கு காலம் தமிழ் மக்கள் ஏதோ ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஆகக் கூடிய பட்சம் பெருந்திரளாகத் திரண்டிருக்கிறார்கள். தமிழ்க் கட்சிகளால் அவர்களை அவ்வாறு திரட்ட முடியவில்லை என்பதுதான் கடந்த 14 ஆண்டு காலத்துயரம். அவ்வாறு தமிழ்க் கட்சிகளையும் செயற்பாட்டாளர்களையும் ஒப்பீட்டளவில் ஒன்றாகத் திரட்டிய ஆகப்பிந்திய சம்பவமாக திருமலைத் தாக்குதலை கூறலாம்.

திருமலையில் முன்னணி தாக்கப்பட்ட இடம் எது வென்று பார்த்தால் அது திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் சிங்களமயப்படுத்தப்பட்ட ஒரு பகுதிதான். கடந்த பல தசாப்த காலதமிழ் அரசியலால் அந்தப்பகுதியை மீட்க முடியவில்லை. அதுமட்டுமல்ல, இப்பொழுது அங்கே வைத்து ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார். கிழக்கில் தொடங்கிய நிலப்பறிப்பு திருகோணமலையில், அம்பாறையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வெற்றி பெற்றுவிட்டது. அது வடக்குக்கும் படர்ந்து வருகிறது. அதை எதிர்த்த காரணத்தால் முன்னணி தாக்கப்படுகிறது.

தாக்கப்பட்டபோது திருமலை-யாழ். பெருஞ்சாலையில் முன்னணி ஒற்றைக் கட்சியாகத்தான் நின்றது. அதன் நாடாளுமன்ற உறுப்பினர் மிகச் சில ஆதரவாளர்களோடு காணப்பட்டார். அந்த ஊர்தி சில வாகனங்களோடுதான் நகர்ந்து சென்றது. அது ஒரு மக்கள் மயப்பட்ட வாகனப் பேரணி அல்ல. தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலின் ஈட்டி முனையாகக் காணப்படும் ஒரு கட்சி மிகச் சிலரோடு ஒரு தாக்குதலை எதிர்கொண்டமை என்பது எதைக் காட்டுகின்றது? அது தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலின் பலவீனமா? அல்லது அந்தக் கட்சியின் பலவீனமா?

இதே திலீபனின் நினவேந்தல்நாளில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 2020 இல் எல்லாக் கட்சிகளும் இணைந்து எதிர்ப்பைக் காட்டின. அப்பொழுது பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவின் மூலம் அந்த எதிர்ப்பு நடவடிக்கையை முறியடிக்க முயற்சித்தார்கள். ஆனால் அங்கே ஒன்றுபட்டு நின்றதால் பொலிஸார் அந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இதை இங்கு எழுதுவதன் மூலம் இந்தக்கட்டுரையானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏனைய கட்சிகளோடு இணைந்து கூட்டணியொன்றை உருவாக்கவேண்டும் என்றெல்லாம் சிறுவர் சித்திரக்கதை எழுத வரவில்லை. ஆனால், பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் தமிழ் மக்கள் மத்தியில் புலப்பெயர்வு அதிகரித்து வரும் ஓர் அரசியல் சூழலில், தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியல் எனப்படுவது இவ்வாறு மக்கள் மயப்படாத சிறுதிரள் நடவடிக்கையாகச் சுருங்கி விட்டதை, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு நெடுஞ்சாலையில் வைத்துத் தாக்கப்படுவதை, அவரைச் சூழ்ந்து மிகச் சில ஆதரவாளர்களே நிற்பதை, சிங்கள - பௌத்த அரசியலும் வெளியுலகமும் எப்படிப் பார்க்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிஸ்தான் தலைவர் படுகொலை




## அமெரிக்க - இந்திய சமரசமும் கனடாவும்

அ.நிக்ஸன்

இந்தோ-பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களில் இந்தியாவின் ஒத்துழைப்பை நாடிநிற்கும் அமெரிக்கா, மோடி அரசாங்கத்தால் தொடர்ச்சியாக இந்தியாவில் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதஉரிமை மீறல் செயற்பாடுகள் இந்துசமயம் அல்லாத ஏனைய சமயத்தவர்கள் மீதும் வேறு சமூகங்கள் மீதும் நடத்தி வரும் மிக மோசமான மனிதாபிமானமற்ற செயற்பாடுகளை இதுவரை கண்டித்ததாகத் தெரியவில்லை.

தனக்குரிய புவிசார் அரசியல் பொருளாதார நோக்கில் அமெரிக்கா, இந்தியாவுடன் இணைந்து பயணிக்க முற்பட்டு அதற்காக ஜனநாயக மற்றும் தாராளவாத நற்சான்றிதழ்களைச் சமரசம் செய்கிறது. சீன விவகாரத்தில் இந்தியாவுக்கும் அமெரிக்கா தேவை.

2005 ஆம் ஆண்டு முதல் அமெரிக்க - இந்தியா கூட்டு விரைவான வேகத்தில் வளர்ந்தது. ஆனால் இந்தியாவில் மனிதஉரிமை மீறல்கள் மற்றும் ஒரு கட்சி ஜனநாயகத்தின் சாதனைகளைப் பார்க்கும் போது, இந்தியாவின் ஜனநாயக விரோதப் போக்குகளை அமெரிக்க - இந்திய அரசுகளின் பகிரப்பட்ட மதிப்புகளாக வகைப்படுத்துவதன் மூலம் அமெரிக்கா தனது ஜனநாயக உருவத்தை இந்தியாவுடன் சமரசம் செய்திருக்கிறது என்றே பொருள் கொள்ளமுடியும். டொனால்ட்ட்ரம்ப், மோடிக்கு வழங்கிய முக்கியத்துவம் ஜோ பைடன் ஆட்சியில் மாற்றமடையும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அமெரிக்கா மோடியின் ஜனநாயக விரோதங்களை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, இந்தியாவுடன் தொடர்ந்தும் சமரசம் செய்திருக்கிறது.

இந்தப் பின்புலத்திலேயே கனடாவில் காலிஸ்தான் அமைப்பு மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை அவதானிக்கமுடியும். தாக்குதலுக்கு இந்தியா காரணம் என்று கனடாப் பிரதமர் நேரடியாகக் குற்றம் சுமத்தியிருந்தாலும் அதனை இந்தியா மறுத்திருக்கிறது. ஆனால் பின்னணியில் இந்தியாதான் என்று கனடா நம்புகிறது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இது தெரியாததல்ல.

இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்கா, கனடாவுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்திருந்தாலும் இந்தியாவை நேரடியாகப் பகைத்துக்கொள்ளும் நிலையில் இல்லை என்பதை அமெரிக்க ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றன. அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் தம்மை மனிதஉரிமைகளின் பாதுகாவலர்கள் என்று மார் தட்டுகின்றன. அதற்காகத் தெற்காசியா உள்ளிட்ட ஏனைய நாடுகளைத் தினமும் கிண்டலாகவும் விமர்சிக்கின்றன. ஆனால் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று கூறப்படும் இந்தியாவில் மோடியின் மனித உரிமை மீறல் செயற்பாடுகளைக் கண்டுகொள்ளாமல் அமெரிக்கா, இந்தியாவைப் பாராட்டுவதாக சீனாவின் குளோல்ரைம்ஸ் ஆங்கிலச் செய்தி இணையத்தளம் குற்றம் சுமத்தியுள்ளது.

புவிசார் அரசியல் - பொருளாதார நலன்கள் மற்றும் சீனாவுக்கு எதிரான நிகழ்ச்சி நிரலில் இந்தியாவையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தினால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடுகள் இந்தியாவைப் பாராட்டும் நிலைக்குத் தூண்டப்படுவதாகவும் குளோபல் ரைம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

'மத சுதந்திரத்தின் கடுமையான மீறல்களுக்காக' இந்தியப்பிரதமர் நரேந்திரமோடிக்கு ஒருமுறை அமெரிக்கா விசா வழங்க மறுத்திருந்தது. 2002 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான படுகொலைகளைக் கண்டித்து அமெரிக்கா மோடி மீது அப்போது கடும் விமர்சனத்தையும் முன்வைத்திருந்தது. ஆனால் தற்போது அமெரிக்கா மோடியை அரவணைக்கிறது. 2002 இல் இருந்து இன்றுவரை மோடியின் செயற்பாடுகளை நோக்கினால் மோடி அரசாங்கம் மத மற்றும் இன ரீதியில் சிறுபான்மையினரைக் குறிவைத்துக் கடுமையான சட்டங்களை இயற்றியுள்ளது. அந்தச் சட்டங்கள் மூலம் சிவில் சமூகக் குழுக்களின் மீதான பிடியையும் மோடி அரசாங்கம் இறுக்கி வருகின்றது.

பேச்சுச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் இணைய முடக்கங்கள் என்பவற்றை மோடி அரசு திணித்துள்ளது. குறிப்பாக ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் மேலோங்கியிருப்பதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது. மோடியை , அமெரிக்கா அணைத்துக்கொண்ட முறை என்பது அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையில் உள்ள பாசாங்குத் தன்மையின் வெளிப்பாடு எனவும் அந்த ஆய்வுத்தளம் ஆதாரங்களோடு சுட்டிக்காட்டுகிறது.

அமெரிக்க அரவணைப்பு அல்லது இந்தியாவின் இரட்டைத் தன்மை கொண்ட வெளியுறவுக் கொள்கையை விரும்பியோ விரும்பாமலோ மேற்கு நாடுகள் குறிப்பாக அமெரிக்கா ஏற்றுக் கொள்கிறது என்ற காரண காரியங்களினால் இந்தியா உலக அரங்கில் உயர்ந்து வரும் நிலையில் இருப்பது போன்ற தோற்றப்பாடு தென்படுகிறது.

ஆனால் இந்தியாவில் மிகச் சமீபகாலமாக நடந்து வரும் வகுப்புவாத வன்முறைகள், பாரபட்சமான நடைமுறைகள், மதமாற்றச் சட்டங்கள் மற்றும் துன்புறுத்தல்களால் இந்தியாவின் ஜனநாயக அந்தஸ்து குறைமதிப்புக்கு உட்பட்டுள்ளது என்றே கூறலாம். 2016 க்கும் 2020 க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் வகுப்புவாதச் செயற்பாடுகளினால் ஐம்பதுக்கும் மேற்பட்ட இறப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கை சமீபத்திய காலத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதாகவும் ஆதாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. சர்ச்சைக்குரிய குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது, இந்தியாவில் மத சுதந்திரம் மற்றும் பன்மைத்துவம் குறித்த சூடான விவாதங்களையும் மேலும் தூண்டியுள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல், இந்தியாவில் ஜனநாயக நெறிமுறைகள் கணிசமான அளவு மோசமடைந்துள்ளன. அதன் ஜனநாயக மதிப்பெண் 2014 இல் 7.92 என்ற உச்சத்தில் இருந்து 2020 இல் 6.61 ஆகக் குறைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

உலகளாவிய தரவரிசையில் 27 ஆவது இடத்திலிருந்து 53 ஆவது இடத்துக்கு இந்தியாவின் ஜனநாயகச் செயற்பாடுகள் வீழ்ச்சியடைய வழிவகுத்துள்ளன. இந்தச் சரிவுக்கு மோடியின் தலைமையின் கீழான அரசாங்கமே காரணம் என்றும் கூறப்படுகின்றது. அப்படிப் பார்த்தால் இந்தியாவை 'ஜனநாயகத்தின் தாய்' என்று மோடியின் ஆட்சியில் கூறக்கூடிய நம்பகத்தன்மை இருப்பதாகத் தெரியவில்லை. மோடியின் பிரதமர் அலுவலகம்

**புலம்பெயர் நாடுகளில் தமிழர்களுக்கு ஏதும் நடந்தால் டில்லியையும் கொழும்பையும் பகைக்கக் கனடா விரும்புமா?**

தனிப்பட்ட பிரபலத்தை , மத மற்றும் இன வெறுப்பை பரப்புவதற்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படுவதாக செய்டா சபா படூல் (Syeda Saba Batool) என்ற அரசியல் ஆய்வாளர் ஜியோபொலிற்றிகல் மிரர் என்ற ஆய்வுத் தளத்தில் எழுதிய கட்டுரையில் விபரிக்கிறார். இந்தியாவை இந்து நாடாக மாற்ற மோடி முற்படுகிறார். இது இந்துக்கள் அல்லாதவர்களைத் துன்புறுத்துவதற்கும், மீறுவதற்கும் வழிவகுக்கும். அவர்களின் மனித உரிமைகள், இந்துத்துவ சித்தாந்தத்தின் மேலாதிக்க வடிவமைப்பு தெற்காசியாவின் பிராந்திய பாதுகாப்பை எவ்வாறு சீர்குலைக்கிறது என்பதையும் காட்டுகிறது.

தற்போதைய இந்திய ஆட்சியின் ஜனநாயக விரோத நற்சான்றிதழ்கள், ஜனநாயக நெறிமுறைகளில் மோடியின் அர்ப்பணிப்பு இல்லாததற்கு போதுமான சாட்சியங்களாக உள்ளன. ஆனாலும் மோடியின் தொடர்ச்சியான ஜனநாயக மீறல் செயற்பாடுகளின் பின்னணியால்தான் கனடா தற்போது இந்தியாவுடன் முரண்படுவதாகவும் கூறமுடியாது. இருந்தாலும் காலிஸ்தான் தலைவர் கொலை செய்யப்பட்டமைக்கு இந்தியா காரணம் என்ற கனடா பிரதமர் ட்ரூடோவின் குற்றச்சாட்டுகளுக்குப் பின்னர் கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் தடம் புரண்டுள்ளன என்பது உண்மையே.

இந்தச் சூழலில் மேற்குலக நாடுகளுக்குச் சவால்விட சீனாவுக்கு இதுவொரு நல்ல வாய்ப்பு என்று கருதலாம். கனடா இந்தியா சர்ச்சையைச் சீனா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும் என்று கனேடிய ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன.

இந்தியச் செயற்பாட்டுக்கு எதிரான தனது நடவடிக்கைகளுக்குக் கனடா சர்வதேச ஆதரவைத் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைக்கு இந்தியா ஒத்துழைக்க வேண்டும் என்று அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் புதுடில்லியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கனேடியச் செய்தி இணையத்தளமான டொராண்டோ ஸ்டாரில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையில், வில்லனோவா பல்கலைக்கழகத்தின் சார்லஸ் விகர் சட்டக் கல்லூரியின் சர்வதேசச் சட்ட உதவிப் பேராசிரியரான பிரஸ்டன் ஜோர்டன் லிம், இந்தச் சர்ச்சை மீது சீனா எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை விபரிக்கிறார். கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே அதிகரித்து வரும் முரண்பாட்டினால் மேற்கத்திய நாடுகளிடையே குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. ஏனெனில் சீனாவுக்கு எதிரான ஒற்றுமையை அது குறைத்துவிடும் என்று ஜோர்டன் லிம் விமர்சிக்கிறார். அமெரிக்கத் தலைமையை மையமாகக் கொண்டு பேசப்படும் பிராந்தியப் பாதுகாப்பில், இந்தியாவின் பலவீனமான நிலை காரணமாக சீனாவுக்கு பலன் கிடைக்கும் என்றும் அவர் நம்புகிறார்.

இந்தியாவுக்கு எதிராகக் கனடா உறுதியான ஆதாரங்களை வழங்கினால் அது வெளிநாட்டுத் தலையீட்டை ஒரு புதிய நிலைக்குக் கொண்டு செல்லும் என்று பிரஸ்டன் ஜோர்டன் லிம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தோ - பசுபிக் விவகாரத்திலும், சீனாவும் கனடாவும் எதிரும் புதிருமாக உள்ளன. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவைப் போலவே, கனடாவும், இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவை ஒரு முக்கியமான சக்தியாக நோக்குகிறது.

இந்தோ-பசுபிக் தந்திரோபாயத்தில், 'சீனா ஸ்திரமின்மையை ஏற்படுத்தும் உலக சக்தியாக உள்ளது' என்று ஏற்கனவே கனடா கூறியுள்ளது. ஆகவே சீனாவை எதிர்கொள்ளத் தன் நட்பு நாடுகளுடன் இணைந்து செயற்படுவதே கனடாவின் சமகால உத்தியாக இருக்கின்றது. இந்த உத்தியில் இந்தியாவைத் தனது இயல்பான கூட்டாளியாகக் கனடா கருதுகிறது. ஆனால் காலிஸ்தான் தலைவரின் கொலைச் சர்ச்சைக்குப் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே அதிகரித்து வரும் தூரம் கனடாவின் இந்த வியூகத்தைப் பலவீனப்படுத்தும். சீனாவை எதிர்கொள்வதற்காகக் கட்டமைக்கப்பட்ட ஒற்றுமைக்கு அது ஆபத்தையும் ஏற்படுத்தலாம். இந்தப் பின்னணியில் கனடா - இந்திய மோதல் விவகாரத்தில் ஈழத்தமிழர்கள் ஒரு விடயத்தைக் கவனத்தில் எடுப்பது நல்லது. அதாவது காலிஸ்தான் அமைப்புக்காக கனடா குரல் கொடுப்பதாக நம்பக்கூடாது. தனது நாட்டுக்குள் இந்திய உளவுத்துறை ஊடுருவியுள்ளது என்பதே கனடாவுக்குள்ள பிரச்சினை. தமது புவிசார் அரசியல், பொருளாதார நோக்கில் இந்தியா போன்ற நாடுகளின் உள்ளக ஜனநாயக மீறல்களைக் கண்டுகொள்ளாமல் இருந்த அமெரிக்கா, கனடா போன்ற மேற்கு நாடுகள். வேறு நாடுகளுக்குள் அத்துமீறி தமது நாடுகளுக்கு எதிரான தீவிரவாதிகளைச் சுட்டுக் கொன்றனர் என்பதற்கு ஆதாரங்களும் இல்லாமலில்லை. ஆகவே ஒன்றை ஒன்று உதாரணமாக வைத்துக் கொண்டு தமது நலனுக்காக மாத்திரம் இந்த வல்லாதிக்க நாடுகள் , ஒன்றில் ஒன்றாகத் தங்கி வாழும் அரசியல் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதையே ஈழத்தமிழர்கள் கருத்தில் எடுக்கவேண்டும்.

கனடாவுக்குள் புகுந்து காலிஸ்தான் தலைவரை இந்தியா கொலை செய்தமைபோன்று, புலம்பெயர் நாடுகளில் ஜனநாயக வழியில் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஈழத்தமிழ்ப் பிரதிநிதிகள் மீது இலங்கை குறிவைத்தால் கனடா போன்ற நாடுகள் குரல் கொடுக்குமா என்பது கேள்வியே.

ஏனெனில் இலங்கைதான் நேரடியாக ஈடுபட்டது என்று தெரிந்தாலும் அதன் பின்னால் நிச்சயம் இந்தியா இருந்திருக்கும். அல்லது இந்தியாவுக்கு அப்படியொரு சம்பவம் நடந்தமை தெரிந்திருக்கும். இதன் காரணமாக ஈழத்தமிழர்களுக்காக இந்தியாவுடன் முரண்பட கனடா உள்ளிட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகள் முன்வரக்கூடிய வாய்ப்புகள் இல்லை என்பதே பட்டவர்த்தனம். 2009 க்கு முன்னரும் அதற்குப் பின்னரான சூழலிலும் இதுதான் நடக்கிறது - நடந்து கொண்டுமிருக்கிறது.

மோடியின் ஜனநாயக மீறல் இந்துத்துவாச் செயற்பாடுகளைக் கண்டிக்காமல் இந்தியாவுடன் அமெரிக்கா சமரசம் செய்வது போன்று, வடக்கு-கிழக்கில் பௌத்தமயமாக்கல் உள்ளிட்ட தமிழர்களுக்கு எதிரான சிங்கள ஆட்சியாளர்களின் அத்தனை அநீதிகளையும் அமெரிக்கா போன்ற உலக நாடுகள் கண்டுகொள்ளாமல் இலங்கையுடன் தொடர்ந்தும் உறவைப் பேணுகின்றன. ஆகவே ஒவ்வொரு தமிழ்த்தேசியக் கட்சிகளும் தத்தமது தேர்தல் அரசியல் செயற்பாடுகளுக்கு அப்பால் ஒரு தேசமாகச் சிந்தித்து , ஒருமித்த குரலில் அரசியல் விடுதலைக் கோரிக்கையை முன் நிறுத்தினாலே தவிர, எந்த ஒரு நாடும் "இலங்கை அரசு" என்ற கட்டமைப்பை மாத்திரமே பலப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> அந்தப் பெண்கள் சிறைச்சாலைக்குள் கொலை, கஞ்சா, களவு, பாலியல் சீர்கேடு என்ற குற்றங்களில் ஈடுபட்ட எல்லாரையும் மந்தை அடைப்பது போல் ஒன்றாக அடைத்தி ருந்தார்கள். சிறுகுற்றம் செய்துவிட்டு வருபவர்கள் கூட பெரிய குற்றவாளி ஆகும் சந்தர்ப்பம் நிறையவே இங்கு காணப்பட்டது.




சஞ்சீவி தொடர்கதை

ரஜிதா அரிச்சந்திரன்

லண்டன் வந்திறங்கியதும் ஷோபாவுக்கு குளிர ஆரம்பித்து. இலங்கையில் மாசி மாதக் குளிரையே தாங்கமாட்டாதவளை பனிக்கட்டிகள் கொட்டும் இடத்தில் விட்டால் என்ன செய்வாள்? என்றாலும் என்ன செய்வது? " சரி பழகிக் கொள்வோம்" என தனக்குத் தானே கூறிக் கொண்டாள் ஷோபா . டொடாவின் புண்ணியத்தில் ஷோபாவின் தங்குமிடம் மற்றும் இதர விடயங்கள் வேகமாக நடைபெற்றன. ஒருவாறாக ஷோபாவும் பல்கலைக்கழகம் போக ஆரம்பித்தாள். பழசை எல்லாம் மறந்தாள். புதிய நண்பர்கள், புதிய சூழல் என்று அவளின் வாழ்க்கை ரம்மியமாக மாறத்தொடங்கியது . படிப்பிலும் தன் நிதானத்திலும் கவனமாய் இருந்த ஷோபாவுக்கு அடிக்கடி அசோக்கின் நினைவு வரும்.

'ஐயோ அவனுக்குச் சொல்லாமல் வந்துவிட்டோமே...' என்று நினைத்துகொண்டே நடந்து கொண்டிருந்த ஷோபா, திடீரென முன்னாள் ஆளரவத்தை உணர்ந்து, சட்டென நின்றாள். எதிரே சிரித்தபடி நின்று கொண்டிருந்தான் அசோக். ஷோபாவால் நம்பவே முடியவில்லை.

'அசோக் நீ எப்பிடி இங்க?'

' அதுதான் விதி. எனக்கும் இங்க ஸ்கொலர்ஷிப்பில மாஸ்டர் டிகிரி செய்ய இடம் கிடைச்சுது. வந்து பார்த்தால் நீ நிக்கிறாய்'

தன்னிலை மறந்த ஷோபா பாய்ந்து அவனை இறுகத் தழுவினாள்.

'சொறி அசோக், நான் வரேக்க உனக்குச் சொல்ல ஏலாமல் போட்டுது' என்று அழத்தொடங்கினாள்.

"ஷோபா அழாதே. நான்தான் வந்திட்டனே " என அசோக் ஆறுதல் கூறினான். இவர்கள் நட்புக்கும் காதலுக்கும் இடையில் பயணித்தார்கள். அசோக்கும், ஷோபாவும் ஒரே பாடம் என்பதால் அடிக்கடி சந்திக்க முடிந்தது. ஷோபாவின் நண்பர்கள் அவனுக்கும் நண்பர்கள் ஆனார்கள். இருவரும் எந்தக் கள்ளங்கபடமும் இன்றிப் பழகினார்கள். ஷோபாவுக்கு சில வேளைகளில் தாயின் நினைப்பும் இடையிடையே வந்து போகும். அதைத்தவிர அவளுக்கு வாழ்வில் குறையேதும் இருக்கவில்லை

☒ ☒ ☒ ☒

அந்தப் பெண்கள் சிறைச்சாலைக்குள் கொலை, கஞ்சா, களவு,பாலியல் சீர்கேடு என்ற குற்றங்களில் ஈடுபட்ட எல்லாரையும் மந்தை அடைப்பது போல் ஒன்றாக அடைத்திருந்தார்கள். சிறுகுற்றம் செய்துவிட்டு வருபவர்கள் கூட பெரிய குற்றவாளி ஆகும் சந்தர்ப்பம் நிறையவே இங்கு காணப்பட்டது. அப்படியான ஒரு சூழலில்தான் ஆனந்தியும் அவர்களுடன் அடைக்கப்பட்டிருந்தாள். ஆனந்தி என்னதான் கொலை செய்திருந்தாலும் கூட, ஒரு அரச அதிகாரியாக இருந்தவள், படித்தவள் என்பதால் அவளுக்கு கொஞ்சம் மரியாதை இருந்தது. இதைக் கண்ட இன்னொரு கைதியான நிர்மலாவுக்கோ ஆத்திரம். அவள் சிலர் காதுபடவே 'இவள் ஒருத்தனை வைச்சிருந்துட்டு, காசுக்காக அவனையே கொலை செய்தவள்' எனப் பலமுறை பேசியதைக் கேட்டும் கேளாதவளைப் போல பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள் ஆனந்தி. ஆனால் நிர்மலாவின் அட்டகாசம் நாளுக்குநாள் மேலோங்கியது. ஆனந்தி பொறுக்க இயலாதவளாகப் பொங்கியெழுந்தாள். அதன் விளைவுதான் . நிர்மலா மீது கோபத்தோடு பாய்ந்தாள் ஆனந்தி. ஆனால் நிர்மலா கொலை, கொள்ளையில் அனுபவம் கொண்ட குற்றவாளியென்பதால் . அவ்ளது பதிலடி பலமாக இருந்தது. ஆனந்தியைத் தள்ளி விழுத்தி, மேல ஏறி இருந்து உழக்கி, சாப்பாட்டுக் கோப்பையால் தலையில் அடிக்க, ஆனந்தி மயக்கமடைந்தாள். தலையில் இரத்தம் கொப்பளித்தது. கூட இருந்தவர்கள் கத்தத் தொடங்கினர். ஜெயில் உத்தியோகத்தர்கள் பாய்ந்து வந்தார்கள். அவசரஅவசரமாக அம்புலன்ஸுக்குப் போன் பண்ணி, நிர்மலாவை அதில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பினார்கள்.

மருத்துவமனையில் "நிறைய ரத்தம் போயிருக்கிறது . இப்போதைக்கு ஒன்றும் சொல்ல முடியாது. எதற்கும் குடும்பத்தினருக்கு அறிவியுங்கள்." என்றார்கள். அவள் அதனை தொலைபேசியூடாக விக்னேஸுக்கும், ஷோபாவுக்கும் சொன்னாள். ஆனால் அவர்கள் ஆனந்தியை நினைத்து எந்தப் பதற்றமும் அடையவில்லை. கமலா மட்டும் சில தடவைகள் ஆனந்தியைப் போய் பார்த்தாள். நல்லகாலம், ஆனந்தி சில நாள்களில் உடல்நலம் பெற்றுவிட்டாள்.

மீண்டும் அவள் சிறையில் அடைக்கப்பட்டாள். அங்கிருக்கும் காலத்தில் அவள் புதிய புத்தகங்களை வாசித்தாள், யோகாசனம் செய்தாள். இவற்றினூடாக அவள் புதிய வாழ்க்கை முறைக்குச் செல்ல ஆரம்பித்தாள்.

இப்போது கமலாவும் அடிக்கடி அவளைச் சிறையில் பார்வையிட வரத் தொடங்கியிருந்தாள். அது ஆனந்திக்கு ஆறுதலாக இருந்தது. 'ஷோபாவுடன் கதைக்க வேண்டும்' எனப் பலமுறை அழுதாள். 'கமலா எனக்கு உதவ மாட்டாயா?' எனக் கேட்டாள்.

"ஆனந்தி நான் உன்னைப் பார்க்க வருவதே ஒருவருக்கும் தெரியாது. தெரிந்தால் என்னையும் சேர்க்கமாட்டார்கள். இப்படி நீ கேட்டுக் கொண்டிருந்தால் இனி நான் வரமாட்டேன் " என்று கமலா சொன்னதும், ஆனந்தி மௌனமானாள்.

(தொடரும்)



# உளர்ப்தினம்

பாகம் 2

இராகவன்



அப்ப நடன பாடத்தை மாலதி ரீச்சர்தான் படிப்பிச்சவா. ஒருக்காப் பாத்தால் இன்னொருக்கால் பாக்கவேணும் போலயிருக்கிற அழகி. அவா சிரிக்கிறது இன்னும் நல்ல வடிவாயிருக்கும். வழமையாப் பச்சை நிறத்திலதான் சீலை கட்டுவா. பச்சை அவாவுக்கு பிடிச்ச நிறமாயோ அல்லது ராசியான நிறமாயோ இருந்திருக்குமெண்டு நினைக்கிறன்.

எல்லாம் நல்லபடி நடந்து கொண்டிருக்கேக்குள்ள 1990 சித்திரை முடியேக்குள்ளதான் சாதுவாப் பிரச்சினை தொடங்கிச்சுது. அப்பிடியே எல்லாம் படிப்படியாத் தொடங்கி வருசத்தின்ர நடுப்பகுதியில பிறேமதாஸவின்ர அரசாங்கத்துக்கம் இயக்கத்துக்குமிடையில பிரச்சினை முத்திப் பெருத்திட்டுது. யாழ்ப்பாணக் கோட்டையை இயக்கம் சுற்றிவளைச்சு முற்றுகையிட்டுது. கறண்டை நிப்பாட்டினாங்கள். பள்ளிக்கூடங்கள் இயங்கேல்ல. ரியூசனுகள் இயங்கேல்ல. இப்ப நாங்கள் பொருளாதார நெருக்கடிக்குள்ள சிக்குப்பட்டிருக்கிற மாதிரி அப்ப பொருளாதாரத் தடைக்குள்ள சிக்குப் பட்டம்.



ஆனால் ஒரேயொரு வித்தியாசம் என்னவெண்டா பொருளாதார நெருக்கடி எண்டது இண்டைக்கு நாடுமுழுக்க இருக்கிற பிரச்சினை. ஆனால் பொருளாதாரத் தடை எண்டது அண்டைக்கு யாழ்ப்பாணச் சனத்துக்கு மட்டுமேயிருந்த பிரச்சினை. மண்ணெண்ணெய் இல்லை. பெற்றோல் இல்லை. சவுக்காரமில்லை. ஏன் சைக்கிளுக்கு ரயர், ரியூப் கூட இல்லை. இதெல்லாம் வவுனியாவுக்கு இஞ்சாலதான்.

அங்கால இருக்கிற ஆக்களுக்கு எல்லாம் தாராளமாகக் கிடைச்சுது. இதில பகிடியென்னவெண்டா வவுனியாவுக்கிஞ்சால ரயர், ரியூப்பை உதிரியாக் கொண்டு வரேலாது. ஆனால் சைக்கிள் ஒண்டையெடுத்து ஓடிக்கொண்டு வரலாம். இந்த வாய்ப்பை எங்கடையாக்கள் தவறவிடேல்ல. இஞ்சையிருந்து கிளாலியால படகேறிப்போய் வவுனியாவில புதுச் சைக்கிளொண்டையெடுத்து ஓடிக்கொண்டு வாறது வழமையாயிருந்தது.

எங்கடையாக்கள் 'ஜாம்'போத்தில விளக்கைக் கண்டுபிடிச்சினம். டைனமோ சுத்தி றேடியோ கேட்டினம். பனங்களியில உடுப்புத் தோய்ச்சினம்.


இப்படியெல்லாம் புதுமையள் நடந்துகொண்டிருக்கேக்குள்ள எங்கடையாக்கள் சிலர் இப்ப போற மாதிரி அப்பவும் படகேறி கடலால இந்தியாவுக்குப் போகத் தொடங்கிச்சினம். இதில நான் முதல்ல சொன்ன மாலதி ரீச்சரும் ஒராள். அவா தன்ர குடும்பத்தோடை இந்தியாவுக்குப் போகேக்க படகேறிக் கடல்ல போகேக்குள்ள படகு திசைமாறி நடுக்கடலுக்குப் போட்டுது.

கொண்டுபோன சாப்பாடு தண்ணியெல்லாம் முடிஞ்சு கிழமைக்கணக்கில ஒரு உதவியுமில்லாமல் நடுக்கடல்ல தத்தளிச்சுப் படகிலயிருந்தாக்கள் ஒவ்வொருதரா சாகத் தொடங்கிச்சினம். செத்தாக்களை ஒண்டும் செய்யேலாமல் மற்றாக்கள் கடல்ல தூக்கி எறிய வேண்டியிருந்தது. மாலதி ரீச்சரும் படகில செத்து விழுந்து கடல்ல தூக்கியெறிஞ்சதெண்டு பிறகுதான் கேள்விப்பட்டன். இதுவரைக்கும் உப்பிடி எவ்வளவோ நடந்திட்டுது. அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது?


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



**இ.விசாளினி**
தரம் - 7A
கிளி/ இராமநாதபுரம் மகா
வித்தியாலயம்



**ர.சிவஜனனி**
தரம் - 6
யா/ வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை.

**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




**ச.அகப்பிரியன்**
தரம் - 6
மு/மல்லாவி
மத்திய கல்லூரி



**A.யதிஸ்கா**
தரம் - 2C
யா/கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை



**எ.நர்த்தனா**
தரம் - 4
இணுவில் சிவகாமி
அறநெறிப்பாடசாலை



**A.நிதுஷனா**
தரம் - 7F
யா/ வேம்படி மகளிர் உயர்தரப்
பாடசாலை




**து.அஜிந்**
தரம்.- 09
யா/மந்துவில்
றோ.க.த.க.பாடசாலை

## தன்னம்பிக்கையின் ஊற்று தந்தை



அன்னை தன் வயிற்றில் பத்து
மாதங்கள் நம்மைச் சுமந்தாலும், ஆயுள்
வரை நெஞ்சில் சுமப்பவர் தந்தை

வாழ்க்கைச் சக்கரத்தில் நாம் வசதியாக
வாழ்வதற்காக,
ஓயாமல் சுழலும் அன்புச் சக்கரம்.

'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'
என்னும் ஔவையின் வாக்கில்
எவ்வளவு உண்மை
உழைப்பு, சேமிப்பு, தன்னம்பிக்கையின்
ஊற்று தந்தை என்றால் மிகையாகாது.

அப்பாவின் கரம் பிடித்து நடக்கையிலே,
கவலை அனைத்தும் மறந்து போகும்.

தன் குழந்தை தன்னைவிட
உயர்ந்த நிலைக்குச் செல்ல
வேண்டுமென்று தோளில்
சுமந்து உலகை காட்டும் உத்தமர்

**செ.கிருஷ்டிகா, நல்லூர்.**

## நாய்



திருடர் வீட்டில் நுழையாமல்
தினமும் காவல் காக்கும்
வருவோர் தம்மை இனங்கண்டு
வாலை ஆட்டி வரவேற்கும்


வேட்டை ஆட என்றே
கூட்டிச் சென்றால் போதும்
மோப்பம் பிடித்தே கௌவும்
முகத்தில் களிப்பைக் காட்டும்

தம்பி தங்கையோடு
தானும் விளையாடிடும்
துள்ளிக் குதித்துப் பாயும்
எழிலாய் உறுமிக் காட்டும்

என்றும் தனக்கு உணவிடும்
எஜமான் தன்னைப் பணிந்திடும்
நன்றி என்னும் சொல்லுக்கு
நாங்கள் கூறும் ஜீவன்

**ச.தேனுசன்,**
**தரம்-4**
**யாழ்ப்பாணக் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாமரைச்செல்வி




○ இயல்வாணன்

எழுத்துலகில் தொடர்ச்சியறாது இயங்குவதென்பது, அதிலும் பெண்கள் இயங்குவதென்பது கடினமானது. திருமணமாகி இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் தாயாகி அவர்களது கடமைகளையும் நிறைவேற்றிக்கொண்ட ஒரு குடும்பப் பெண்ணாக இருந்து கொண்டு ஐம்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக எழுதி வருவதென்பது முக்கியமானது. அத்தகைய எழுத்தூழியத்துக்காக அண்மையில் கௌரவிக்கப்பட்டிருக்கிறார் எழுத்தாளர் தாமரைச்செல்வி.

பரந்தன், குமாரபுரத்தில் சுப்பிரமணியத்தின் மகளாக 04.08.1953 இல் பிறந்த தாமரைச்செல்வியின் இயற்பெயர் ரதிதேவி. இவர் தனது ஆரம்பக்கல்வியை பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.

தனது 20 வயதில் (1973) இலங்கை வானொலியில் எழுதத் தொடங்கிய இவர் 1974 இல் வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்த 'ஒரு கோபுரம் சரிகிறது' என்ற சிறுகதையுடன் அடையாளம் காணப்பட்டார். அதிலிருந்து இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். ஈழநாடு, ஈழமுரசு, ஈழநாதம், முரசொலி, தினகரன், சிந்தாமணி, தினக்குரல் முதலான பத்திரிகைகளிலும், மல்லிகை, அமிர்தகங்கை, வெளிச்சம், நாற்று, ஆதாரம், களம், சிரித்திரன், சுடர், ஞானம், மாணிக்கம், கலாவல்லி, கிருதயுகம், விளக்கு, பெண்ணின் குரல், தாயகம், மாருதம், ஜீவநதி, வளையோசை, யாழ்மதி, நுட்பம் ஆகிய சஞ்சிகைகளிலும் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

தமிழ்நாட்டிலும், புலம்பெயர் தேசங்களிலுங் கூட இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. தமிழ்நாட்டில் ஆனந்த விகடன், குங்குமம், மங்கை, இதயம் பேசுகிறது ஆகிய சஞ்சிகைகளிலும், பரிஸ் ஈழநாடு, பரிஸ் ஈழமுரசு, எரிமலை, களத்தில், தாய்வீடு (கனடா), எதிரொலி (அவுஸ்திரேலியா), நடு (பிரான்ஸ்), வணக்கம் லண்டன், அக்கினிக்குஞ்சு(அவுஸ்திரேலியா) ஆகிய புலம்பெயர் ஊடகங்களிலும் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

இவரது சிறுகதைகள் ஆங்கிலம், சிங்களம், ஜேர்மன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது இடைவெளி (The Gap), வாழ்க்கை (The Life) சிறுகதைகள் பேராசிரியர் சி.சிவசேகரத்தாலும், பாதை (The Rugged Path) சிறுகதை ஏ.ஜே.கனகரட்ணவாலும், முகமற்றவர்கள் (Faceless People) சிறுகதை பெ.இராஜசிங்கத்தாலும், எங்கேயும் எப்போதும் (The Invitable) சிறுகதை கே.எஸ்.சிவகுமாரனாலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இவரது 'ஒரு மழைக்கால இரவு' சிறுகதை திருமதி ஜெயசித்ராவாலும், 'வன்னியாச்சி' சிறுகதை திருமதி அனுராத ஜயசிங்கவாலும், 'வாழ்க்கை' சிறுகதை பேராசிரியர் பியசீலி விஜயமானவாலும் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

எல்வின் மாசிலாமணியால் இவரது 'ஓட்டம்' சிறுகதை ஜேர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவரது ஆறு சிறுகதைகள் குறும்படங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இவரது 'இடைவெளி' சிறுகதை '1996' என்ற பெயரில் தமிழ்நாட்டின் பிரபல இயக்குநர் உதிரிப்பூக்கள் மகேந்திரனால் குறும்படமாக்கப்பட்டது.

அவரது மகனான இயக்குநர் ஜான் மகேந்திரனால் 'பாதணி' என்ற சிறுகதை குறும்படமாக்கப்பட்டது. இவரது 'பசி' சிறுகதை தமிழ்நாட்டைச் சேர்ந்த இமயவர்மனால் குறும்படமாக்கப்பட்டு, லண்டனில் விம்பம் அமைப்பு நடத்திய குறும்பட விழாவில் பார்வையாளர் விருது வென்றது. தாயகத்தின் போராளிக் கலைஞர் திலகனால் இவரது 'சாம்பல்மேடு' குறும்படமாக்கப்பட்டுள்ளது. பாதை, வாழ்க்கை ஆகிய சிறுகதைகளும் குறும்படமாக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரச பாடநூலில் தரம் - 11 பாடத்திட்டத்தில் இவரது 'இன்னொரு பக்கம்' சிறுகதையும், தமிழ்நாடு அரசின் தரம் - 11 பாடத்திட்டத்தில் இவரது 'பசி' சிறுகதையும் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவரது சிறுகதைகள் ஒரு மழைக்கால இரவு (1998), அழுவதற்கு நேரமில்லை (2002), வன்னியாராச்சி (2005) ஆகிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

முரசொலி பத்திரிகை நடத்திய குறுநாவல் போட்டியில் முதற்பரிசு பெற்ற 'வேள்வித்தீ' நூல் 1994. இல் மீரா வெளியீடாக வெளிவந்தது. இவரது வீதியெல்லாம் தோரணங்கள் நாவல் வீரகேசரிப் பத்திரிகையும் யாழ். இலக்கிய வட்டமும் இணைந்து நடத்திய நாவல் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது. சுமைகள் (1977), விண்ணில் அல்ல விடிவெள்ளி (1992), தாகம் (1993), வீதியெல்லாம் தோரணங்கள்(2003), பச்சைவயல் கனவு (2004), உயிர்வாசம் (2019) ஆகிய நாவல்கள் இவரால் எழுதப்பட்டு நூல்களாக வெளிவந்துள்ளன.

சாகித்திய மண்டல விருது (பச்சை வயற் கனவு), இலங்கை இலக்கியப் பேரவை விருது (பச்சை வயல் கனவு, விண்ணில் அல்ல விடிவெள்ளி, தாகம்), வடக்கு - கிழக்கு மாகாண விருது (ஒரு மழைக்கால இரவு), வடக்கு மாகாண விருது (வீதியெல்லாம் தோரணங்கள்), சுதந்திர இலக்கிய அமைப்பு விருது(தாகம்), தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க விருது (உயிர்வாசம்) என்பன இவரது படைப்புகளுக்காக கிடைத்த கௌரவங்களாகும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் விருது(2001), கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் இலக்கியமணி விருது(2002), அக்கராயன் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சாதனைப் பெண்மணி விருது (2000), கொழும்பு கலை இலக்கியக் கழகத்தின் விருது (2003), தமிழ்நாடு சின்னப்பாரதி அறக்கட்டளை விருது (2010), கண்டாவளை பிரதேச கலாசாரப் பேரவையின் ஒளிச்சுடர் விருது (2011) எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது (2012), யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் கௌரவிப்பு (2015) என்பன இவரது தொடர்ந்த இலக்கியப் பங்களிப்புக்காக வழங்கப்பட்ட மணிமகுடங்களாகும்.







வாழ்க்கை யதார்த்தங்களைத் தானும் ஒரு சாட்சியாக, பார்வையாளராக நின்று கொண்டு சித்திரிக்கும் யதார்த்தவாத எழுத்து தாமரைச்செல்வியினுடையது. வன்னி மண்ணின் குறிப்பாக, கிளிநொச்சி மண்ணின் வாசத்தை, அங்குள்ள மனிதர்களை, அவர்களின் பாடுகளை, வாழ்க்கையை கமராக் கண்கொண்டு இவரது எழுத்துகள் தத்ருபமாகப் பதிவு செய்துள்ளன.

இவர் ஒரு ஓவியராகவும் விளங்கியுள்ளார் என்பது இந்தச் சித்திரிப்புக்கு மேலும் வளஞ்சேர்த்துள்ளது. 30 ஆண்டுகள் நீடித்த போரின் துயரத்தை இவரது எழுதுகோல் வரலாற்று இலக்கிய மூலாதாரமாகக் கொள்ளத்தக்க வகையில் மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளது. போரில் உடைமைகளை மட்டுமல்ல பல எழுத்துப் பிரதிகளையும் இழந்தபோதும் இருப்பவை இவரது விஸ்வரூப பரிமாணத்தை எமக்கு வெளிக்காட்டுகின்றன.

70 வயதை நிறைவு செய்துள்ள இவர் எழுத்துலகில் 50 ஆண்டுகளை நிறைவு செய்த பெருமையோடு, தனது கணவர், பிள்ளைகளுடன் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார். இவர் தனது எழுத்துகளால் ஈழத்து இலக்கியத்துக்கு மேலும் வளஞ்சேர்க்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

## 1947 செப்ரெம்பர் 24

தமிழர்களுக்கு சம அந்தஸ்து வழங்குவதாக காட்டிக்கொள்ளும் நோக்குடன் லண்டன் சென்ற குழுவில் சுந்தரலிங்கத்தையும் அழைத்துச்சென்றார் டி.எஸ். சேனநாயக்க. சுந்தரலிங்கமும் டி.எஸ்ஸுடன் லண்டன் சென்று சுதந்திர உடன்படிக்கையில் தமிழர்கள் சார்பில் ஒப்பமிட்டார். (தனது தவறுக்காக பின்னர் சுந்தரலிங்கம் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தார்)

## 1947 நவம்பர் 17

இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கும் பிரேரணை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

தென்னிலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் இலங்கையின் தேசியக்கொடியாக வாளேந்திய சிங்கக்கொடியே இருக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொழிற்சங்கவாதி என வர்ணிக்கப்படும் ஏ.ஈ.குணசிங்க சிங்கக்கொடி தவிர்ந்த வேறு கொடிகள் ஏற்றப்பட்டால், தான் அதை எதிர்த்துப் போராடுவேன் எனப் பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றினார்.

இலவசக்கல்வியின் தந்தை எனப் போற்றப்படும் கன்னங்கராவும் இலங்கையின் தேசியக்கொடியாக சிங்கக்கொடியே இருக்கவேண்டுமென வலியுறுத்தினார். கொழும்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய கன்னங்கரா 2000 ஆண்டு பழமை வாய்ந்த சிங்கள மன்னர்களின் கொடியான சிங்கக் கொடியே, தேசியக்கொடியாக இருக்கவேண்டுமென வலியுறுத்தினார்.

## 1947 நவம்பர் 24

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் பிரேரணை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## 1947 நவம்பர் 25

1947 ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி இலங்கையின் முதலாவது நாடாளுமன்றம் தேசாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மன்னார்த் தொகுதி உறுப்பினர் சிற்றம்பல மும்,வவுனியாத் தொகுதி உறுப்பினர் சுந்தரலிங்கமும் டி.எஸ்ஸின் அமைச்சரவையில் அமைச்சர்களாகப் பதவியேற்றுக்கொண்டனர்.

## 1947 டிசம்பர் 06

யாழ்ப்பாணம் - கொழும்பு விமானசேவை ஆரம்பிக்கப்பட்டது.இந்த விமானசேவைக்கு 'சுனேத்ரா தேவி' என பெயர் சூட்டப்பட்டது.வண்ணார்பண்ணையைச்சேர்ந்த ஆயுள்வேத வைத்தியர் மு.கதிரவேற்பிள்ளையும்,சோனகத்தெருவைச்சேர்ந்த ஹாஜி முகமது முகைதீனும் இந்த விமானசேவையில் பயணித்த முதல் பயணிகள் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டனர். இந்த விமானசேவை பின்னர் எயார் சிலோன் (Air Ceylon ) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கொழும்பு யாழ்ப்பாணம் விமான கட்டணமாக 35.00 ரூபாவும்,யாழ்ப்பாணம் சென்னை விமான கட்டணமாக 50.00 ரூபாவும் அறவிடப்பட்டது. 44 இறாத்தல் பொதிகளை கொண்டு செல்வதற்கு பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்தியா செல்லும் பயணிகள் தமது பங்கீட்டு அட்டையைச் சமர்ப்பிக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டதுடன் தடுப்பூசி ஏற்றியமைக்கான சான்றிதழையும் சமர்ப்பிக்கவேண்டும். (அந்தக்காலத்தில் இந்தியாவில் தொற்று நோய்கள் பரவியமையே தடுப்பூசிச் சான்றிதழுக்கான காரணம்). கொழும்பு செல்லும் விமானப்பயணிகளுக்கு இரத்மலானை விமான நிலையத்திலிருந்து லோட்டஸ் வீதி வரை வாகன வசதி செய்து கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்குப் புறப்பட்ட முதலாவது விமானம் எஸ்.ஏ.கரீம் என்ற ஒரேயொரு பயணியுடன் புறப்பட்டது.காலப்போக்கில் திருச்சி,மதுரை விமான நிலையங்களுக்கும் சேவைகள் நடைபெற்றன.

*(வரலாறு நீளும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org